ஞானசம்பந்தம்

மலர் 12] விஜய௵ புரட்டாசி௴ 10—10—53 [இதழ் 11

மைசூர் :

பிருந்தாவனத்தில் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம்

ஆசிரியர் : நாகலிங்கத் தம்பிரான்.
உதவி ஆசிரியர் : ச. தண்டபாணி தேசிகர். தருமபுர ஆதீனப்

சென்னை தருமபுர ஆதீன மடாலய தேவாலய

சமயப் பிரசார நிலையத்தில்

கலைமகள் விழா

செந்தமிழ்ச் சொக்கன் திருவருளால் ஷ்டி பிரசார நிலையத்தில் விஜயஆண்டு புரட்டாசித்திங்கள் 23ம் நாள் 9—10—53 முதல் 11—10—53 முடிய மூன்று நாட்களிலும் பிரசார நிலைய விழாப் பந்தலில் கலைமகள் விழா கீழ்க்காணுமாறு நடைபெறுகிறது.

இராயப்பேட்டை ஓய்வுபெற்ற நீதிபதி திவான்பகதூர் திரு. K. S. இராமசாமி சாஸ்திரிகள் அவர்கள் விழாவைத் தொடங்கிவைக்கிறார்கள்.

இம்மூன்றுநாட்களிலும், நிலையத்தின் திருமுறை ஆசிரியர், திரு. P. சுவாமிநாதன் அவர்களால் தேவார இன்னிசை நிகழ்த்தப்பெறும்.

வீரத் திருநாள் 9—10—53 மாலை 6 மணிக்கு

தலைவர்: டாக்டர் திரு. T. M. P. மகாதேவன் அவர்கள் M. A.
(தத்துவ சாத்திரப் பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம்)

பேச்சு: **“வீரச் செல்வம்”**
திருமதி A. R. இந்திரா அவர்கள் M. A.
(தமிழ் விரிவுரையாளர், எத்திராஜ் பெண்கள் கல்லூரி, சென்னை)

செல்வத் திருநாள் 10—10—53 மாலை 6 மணிக்கு

தலைவர்: ட்ரோஜன், அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் சென்னை

பேச்சு: **“பொருட்செல்வம்”**
திருமதி, சகோதரி, சுப்புலெட்சுமி அம்மாள் மயிலாப்பூர்

கல்வித் திருநாள் 11—10—53 மாலை 6 மணிக்கு

தலைவர்: திரு. K. M. சுப்பிரமணியம் அவர்கள்
(நகரமன்ற உறுப்பினர், தியாகராயநகர்)

பேச்சு: **“கலைச்செல்வம்”**
வித்துவான், C. ஜெகந்நாதாசாரியாரவர்கள் M. A.
(தலைமைத் தமிழ்ப்பேராசிரியர், விவேகானந்தாகல்லூரி, மயிலாப்பூர்)

சமயப் பிரசார நிலையத்தில் மாணவ மாணவியர் பயில்வதற்குரிய திருமுறை இன்னிசை வகுப்பு விஜயதசமி யன்று தொடங்கப் பெறும்.

மைசூர் :



காவிரியம்மன்.



பிருந்தாவனத்தில் ராதாகிருஷ்ணன்.

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 12] விஜயஹ புரட்டாசிமீ 10—10—53. [இதழ் 11

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினுய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

சமயப்பாசறை

நாட்டுப்போர் தொடங்கிய காலத்து நல்ல பாசறைகள் தேவை பாசறையில் படைகள் எந்நேரமும் தியாகபீடத்தில் உயிரைப் பணயமாக வைத்து, உழைப்பைக் காணிக்கையாகக் கொடுத்து, ஒவ்வொரு நிமிஷமும் தன் தலைவனையும் அவன் வெற்றியையும் தியானித்துக்கொண்டிருக்கும். அதற்கு மாருன சக்திகள் எந்த மூலையிலிருந்து எத்துணையளவு சிறியதாகக் கிளம்பினும் விழிப்பாக இருந்து அதனை அழிக்க முற்படும்.

இன்று ஞான அஞ்ஞானப்போர் கிளம்பியிருக்கின்றது. இது இன்றைக்குமட்டுமல்ல; உலகம் தோன்றியநாள் தொடங்கியே உள்ளதுதான். ஆனுல் அந்தக் காலத்தில் உண்டான அஞ்ஞானப்படை நினைத்ததையெல்லாம் நிறைவேற்ற முற்படாது. தர்க்கசாஸ்திரம், நியாயசாஸ்திரம் இவற்றின் வரம்புக்கு உட்பட்டு, பிரத்தியக்ஷம் ஒன்றையே நம்பித் தன்னுடைய போரை நடத்திவந்தது. பார்க்கப்போனுல் கொள்கைக்காக சாஸ்திர வரம்பிலிருந்து சண்டையிட்டது அந்தக்கால அஞ்ஞானப்படை. அந்தப் படைக்குத் தளகர்த்தராயிருந்து சட்ட திட்டங்களை வகுத்தவர் கபிலர். மேலும் சூரபன்மன் தன் தகப்பனுகிய காசிபருடைய உபதேசத்தால் இளமையில் ஞானப் படையில் சேரத் தொடங்கினுன். அஞ்ஞானப் படையின் தலைவரும், தாயாகிய மாயையின் குலகுருவுமாகிய சுக்கிரர் பார்த்தார், சூரபன்மனை அழைத்து, பண மகத்துவத்தைப்

போதித்து, பதவிப் பித்தைத் தலைக்கேற்றி, கடவுள் நம்பிக்கையைக் கொஞ்சம் குறைத்து வைத்தார். கொஞ்சமென்றால் எவ்வளவு என்று கேட்கிறீர்களா! இந்த இரண்டையும் அடைதற்கு ஏற்ற அளவு தவஞ்செய்தால்போதும் என்று. சுக்கிரனும் ஒரு ஒழுங்கு கட்டுப்பாடு இவைகட்கு அடங்கித் தான் அஞ்ஞானப்படையின் அதிகாரியானர். இது பழைய வரலாறு.

இன்றே! நாம் காணும் உலகத்திலும் அப்போர் நடந்து கொண்டுதான் இருக்கிறது. ஆனல் அதற்கு நினைத்ததெல்லாம் திட்டம்; செய்வதெல்லாம் திட்டம்; அழிக ஒழிக என்பன அவைகள் அடிக்கடி சொல்லும் மந்திர வாசகங்கள். வெறுப்புணர்ச்சி தான் விருந்து. விதண்டா வாதங்களும் வீண்கிளர்ச்சியும் அவைகள்பறிமாறும் சிற்றுணவுகள், இந்த நிலை மாறி உண்மை நிலை ஓங்க ஓடி ஓடி ஞானப்படை வீரர்கள் சொல்லம்பைப் பெய்தால் மட்டும் போதாது. அவர்களைச் சேமித்து வைக்கும் பாசறைகளும் தேவை என்பதைத் தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் திருவுள்ளங்கொண்டு தியாகராயநகரில் ஒரு பாசறையை 28—9—53-ல் நிறுவியுள்ளார்கள். உலக சமாதானத்திற்காகச் செய்யப்படும் கொரியாப்போருக்கு முதன் முதல் இந்தியப் படைகளை ஆசீர்வதித்து அனுப்பிய கர்மயோகி கனம் ஸ்ரீ இராஜாஜி அவர்கள் பாசறையைத் திறந்துவைத்து வெற்றி முழக்கம் செய்தார்கள். நமனை அஞ்சோம் என்ற வீரத் தமிழ் விண்ணளவும் சென்று விம்மியது. இந்தப் பாசறையின் நிரந்தரத் தலைவராகக் குருஞானசம்பந்தப் பெருமானுகிய ஞான சூரியன் விளங்குகிருர். தளகர்த்தராக நமது வித்துவான் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நியமிக்கப் பெற்றுள்ளார். தேவநாதத்தைக் கிளப்பிச் சிறுவருள்ளத்தில் ஞான உரத்தை ஊட்ட சாமிநாதன் என்னும் இசைத் தமிழ் வீரர் அமர்த்தப்பெற்றிருக்கிருர். சொல்லென்னும் நல்லம்பால் நல்லெண்ணத்தைப்பரப்பி வீடுகள்தோறும் ஞானப்படையைத் தயாரிக்கும் புலமை வீரர்கள் பணிபுரியக் காத்திருக்கிருர்கள். பாசறை விளங்குகிறது. அமைதியும் அடக்கமும் அறிவும் ஆகிய ஆயுதங்கள் பாசறையிலிருந்து வெளிப்புறப்படும். அஞ்ஞானம்அகலும்; ஞானம் ஓங்கும். சென்னை நகரத்தும் சுற்றுப் புறத்தும் ஆங்காங்குள்ள ஞானநிலையங்கள் பாசறையோடு தொடர்புகொண்டு பணிபுரியுமாக—பணிகொள்ளுமாக.

5552

சென்னையில்

தருமபுர ஆதீன மடாலய — தேவாலய

சமயப் பிரசார நிலையத் திறப்புவிழா

ஐந்து ஆண்டு அநுபவம்:

ஸ்ரீ குருஞானசம்பந்தப் பெருமானுடைய குருபூஜைத் திருநாளில் ஒருநாள். விடியற்காலம். சொக்கலிங்கப் பெருமான் பூஜையை முடித்துக்கொண்டு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் திருவருட் பொலிவோடு ஆஸ்தானத்தை அடைந்தார்கள். ஒரு உத்தரவு பிறந்தது. 'இதுவரை திருவிழாக்காலங்களில் நமது ஆதீனக்ஷேத்திரங்களில் நடைபெறும் சமயப்பிரசாரத் திட்டத்தைத் தினமும் எல்லா இடங்களிலும் நடைபெற ஏற்பாடுசெய்தால் என்ன? நமது பெரியவாள் வாகனமாகிய கார் அதற்குப் பயன்படட்டுமே. ஓடிச்சென்று உண்மைகளைப் பரப்பவேண்டிய சூழ்நிலையில் அல்லவா இந்தக் காலம் இருக்கிறது. இன்றைக்கு இலைமறை காய்களைப்போலச் சமய உண்மைகள் உலகியலில் ஒளிந்திருக்கின்றன. காலம்வந்து, கருணையும் துணைசெய்து, கனிந்தால் தானே வெளிப்படும்; ஆனாலும் காலமும் கருணையும் விரைந்துவரத் தொண்டாற்ற வேண்டியது நம் கடமையல்லவா?' என்பதுதான் அது.

மயிலையிலே:

எலும்பைப் பெண்ணாக்கி இனிய தமிழ்கேட்டு எல்லார்க்கும் கருணைவழங்கக் கற்பகாம்பிகையோடு எழுந்தருளி இருக்கும் கபாலீச்சுவரர் சந்நிதியிலே 3—7—48-ல் பிரசார வாகனம் தன்பணியைத் தொடங்கியது. இன்று ஐந்து ஆண்டு ஆகிறது. இதுவரை 12000 மைல் சுற்றுப்பிரயாணம் செய்து வந்திருக்கிறது. கன்னித் தமிழ்நாட்டில் மட்டுமல்ல - கவின் மலையாளமும் கன்னடமும் இதன் பணியை ஏற்றிருக்கிறது. இதற்கு இடையே பலமுறை சென்னையிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் தெய்வமணம் வீச உலாவி வந்திருக்கிறது.

சற்றேறக்குறைய 250 சங்கங்கள் இதிற் கலந்துகொண்டன. பல்லாயிரக்கணக்கான மக்கள் பயன்பெற்றனர். பேரறிஞர் கள் 502 பேர்கள் இதிற்கலந்து பணியாற்றினர். அவ்வப்போ துண்டான அநுபவங்களால் நமது சமயக்கொள்கைகளையும் சடங்குகளையும் எல்லோரும் எளிதில் அறிந்துகொள்ளச் சிறுநூல்கள் அச்சிட்டு வழங்கப்பெற்றன. பிறகு தாலுக்கா வாரியாக ஒவ்வொரு கிராமங்களிலும் பிரசாரம் செய்தால் பெரும்பயன்தரும் என்று திருவுள்ளத்தில் எண்ணி உத்தரவு பிறந்தது. அதன் காரணமாக நெடுந்தூரம் சென்று பிரசாரம் செய்ய ஒரு வாகனமும், அண்மையில் அடிக்கடி சென்றுவர ஒருவாகனமும் ஏற்படுத்தப்பெற்றன. அதுமுதல் சேரிகள் தோறும் மாதந்தவறாமல் பிரசாரப்பணி நடந்துவருகிறது.

தலைநகரில் ஸ்தாபனம்:

இப்படிப் பல ஆண்டு பலவகைப்பட்ட பணிகளால் விளைந்த அநுபவத்தின் முதிர்ச்சியால், தமிழ்நாட்டின் தலைநகரிலும், ஒரு விசேஷ ஸ்தாபனம் விளங்கவேண்டும். தலை சரியாக இருந்தால்தானே உடல் தளர்ச்சியின்றி இருக்கும். தலை எது? நமது தலைநகரமாகிய சென்னை. உடலோ உள்நாடுகள். உடல் தளர்ச்சிக்கு உலக வைத்தியர்கள் மருந்து கொடுப் பார்கள், தலை தளர்ந்தால் - உள்ளிருக்கும் மூளை தளர்ந்தால் உலகவைத்தியர் உதவிமட்டும்போதுமா? பெரியவைத்தியர் - பிறவிவைத்தியர் – வைத்யநாதப் பெருமான் உதவியைக் கொண்டே உய்விக்கவேண்டும் என்று எண்ணினார்கள், அப் பெருமானுடைய அருளாலும், பொருளாலும் ஒரு அழகான நிலையம், அறிவாளிகள் நிறைந்த - அமைதிக்கும் ஆனந்தத் திற்கும் இடமான தியாகராயநகரில் அமைந்தது. இது ஒரு தனிச்சிறப்புத்தான்.

பெயரிடவேண்டுமே:

அறிவுக்களஞ்சியமாகிய பிறவிச்செல்வர் கனம் வேங்கட சாமி நாயுடு அவர்கள் ‘இந்த நிலையம் மக்கள் மனத்து மாசைப்போக்கித் தெய்வ ஒளி திகழச்செய்யப்போகிறது;

அதற்கேற்ப இதற்குத் 'தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையம்' என்று ஒரு அழகான பெயரை அமைத்தார்கள்.

திங்கட்கிழமை :

சோமவாரமென்றாலே மடத்திற்கு ஒரு சுபமானநாள்: ஆத்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானுக்கு உகந்த நாளல்லவா அது ? அவரும் சோமசுந்தரர். நாளும் சோமவாரந்தானே! அதனால் சுந்தரமாக நிலையத்திறப்பு விழா 28-9-53 திங்கட்கிழமை தொடங்கிற்று.

முன்னேற்பாடு :

சமய நிலையங்கள் அறிவுக்கலை, தொழிற்கலை, நுண்கலை எல்லாவற்றுக்கும் இடமளிப்பன. மாயூரம் கொத்தனார் சமயப்பிரசார நிலையத்தின் கொட்டகை அலங்காரத்தில் கைவன்மை முழுவதையும் கொட்டிவிட்டார். ஒலிமுகம் (பந்தலின் முகப்பு) அறுகோணவடிவாக இடையிடையே தீபஒளியோடு திகழவைத்து விட்டார். சிற்று வேலைதான்; ஆனாலும் உப்பரிகையும் உயர்ந்த கைப்பிடிகளும் எல்லார் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தன. அதுமட்டுமா? அநுபவஞானிகள், அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி இருப்பதாக இறைவனை அநுபவித்து அறிந்தார்கள்; அதனை உள்ளபடி பார்க்க வேண்டுமானால் சமயப்பிரசார நிலையத்தின் அலங்காரப் பந்தலில் நுழைய வேண்டியதுதான். திரைச்சீலைகளில் ஒருபக்கம் விநாயகப் பெருமான் மோதகத்தோடு மூஷிகவாகனத்தில் ஓடிக்கொண்டிருப்பார். முருகப்பெருமான் உருகிவரும் அன்பர்களுக்கு ஒருகையால் அபயம் அளிப்பார். லோகமாதாவோ கருணைக் கண்ணை எங்கும் செலுத்தி இன்பத்தை விளைவிப்பாள். இடபவாகனத்தின்மேல் அனுக்ரக மூர்த்தியாகப் பரமேஸ்வரன் காட்சி வழங்குவார், இந்தக் காட்சி ஒருபக்கத்திலல்ல: எல்லாப்பக்கங்களிலுமே.

மாலை நாலரை மணி ஆயிற்று. பொறுக்கி எடுத்த அறிவாளிகள் கூட்டம் ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆசனங்களை நிறைவித்தது. திருவாவடுதுறை ஆதீனத்திலிருந்து பூஜை சுவாமிகள் அவர்களும் ஏஜண்டுகளும், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்திலிருந்து கார்பார் முதலியவர்களும் வந்திருந்தார்கள்.

விழாவிற்கு வந்தவர்கள் எல்லாருமே சந்தனம் தாம்பூலம் பூச்செண்டுகளைப் பெற்றுக்கொண்டு, பூ மணத்தை முகர்ந்து கொண்டே தெய்வமணம் எப்போது திகழப்போகிறதென்று எதிர்நோக்கியிருந்தார்கள். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் மாலை அனுட்டானங்களை முடித்துக்கொண்டு ஜபம்பண்ணி ஆசமனம்பண்ணிக் கொண்டிருந்தார்கள். நாலே முக்கால் ஆயிற்று. சென்னைமாகாண முதலமைச்சர் கனம் ஸ்ரீ ராஜாஜி அவர்கள் காரிலிருந்திறங்கினார்கள். ஏஜண்டு, சூப்பிரண்டு முதலிய ஆதீனக் காரியஸ்தர்கள் அனைவரும் வரவேற்றார்கள்.

கனம் வேங்கடசாமி நாயுடு அவர்கள் ராஜாஜியை அழைத்துக்கொண்டு கட்டிடத்துக்குள் நுழைந்தார்கள். முகப்பில் கட்டிடத்தின் முன்வாயில் இடப்பக்கத்தில் வெட்டிவைக்கப் பெற்ற சிலாசாசனத்தைத் திறந்துவைத்து ராஜாஜி அவர்கள் மிகவும் உற்றுப் படித்துப்பார்த்தார்கள். அப்போது மகா சந்நிதானம் அவர்களும் பாராயணாதிகளை முடித்துக்கொண்டு பந்தலுக்கு எழுந்தருளுகின்றபோது ராஜாஜி அவர்களை அழைத்துக் கொண்டு மேலே சென்றார்கள். வித்துவான். மௌன. சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் மாலை சூட்டி வரவேற்றார்கள். கனம் ராஜாஜி அவர்கள் அங்குள்ள புத்தகங்களை ஊன்றி அநுபவித்துப் பார்த்தார்கள். திருக்குறள், தேவாரம் இந்தப் பதிப்புக்களை மிக மிகப் பாராட்டினார்கள்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் முதல் திருமுறையின் அருமைபெருமைகளைக் கூறி முதல் திருமுறையைக் கனம் ராஜாஜி அவர்களுக்கு அன்பளிப்பாக அருளினார்கள்.

ராஜாஜி அவர்கள் புஸ்தகசாலையின் தாழ்வாரப்பக்கமாகச் சென்றதும், படமெடுப்பவர்கள் பரபரக்க ஓடிவந்தார்கள். இவர்களைக் கண்டதும் 'நானும் சந்நிதானமும் அடியார்களும் இருக்கலாமே' என்று குறிப்பாகத் தெரிவித்தார்கள். அவ்வாறே படம் எடுக்கப்பெற்றது. அங்கிருந்து விழாப் பந்தலுக்கு மகாசந்நிதானம், ராஜாஜி இருவருமாக எழுந்தருளியானார்கள்.

தொடங்கியது:

விழா தொடக்கமாயிற்று. தருமபுர ஆதீன இசைப் புலவர் இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகரவர்கள் முத்துக்குமாரசாமிப் பிள்ளைத்தமிழில் வருகைப்பருவத்தில் ஒரு செய்யுளைப் பாடினார். வந்திருந்த அறிவாளிகளனைவரும் கானரசத்தில் ஈடுபட்டுப் பாட்டுடைத்தெய்வமாகிய முருகனுகவே தங்களைப் பாவித்துப் தியானத்தில் ஈடுபட்டதால் தம்மையே வரவேற்றதாக எண்ணி மகிழ்ந்தனர்.

ஆசியுரை:

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள், கனம் இராஜாஜியையும் கனம். வேங்கடசாமி நாயுடு அவர்களையும் மற்றவர்களையும் வரவேற்று ஆசிவழங்கும் முகத்தால்,

"இன்று ஒரு நல்ல நாள். அறிவு, அன்பு, அடக்கம், அஞ்சாமை, ஆண்மை, உறுதி, உள்ளத்தூய்மை எல்லா நற்குணங்களுக்கும் உறைவிடமான — தமிழ்நாட்டின் தலைநகரைத் தமிழ்மகனுக்கு வாங்கிக்கொடுத்த ஒரு தமிழ்ப் பெரியார் ஒரு நல்லகாரியத்தைத் தொடங்கிவைக்கப்போகிறார். அவருடைய அறிவுரையில் இந்தஸ்தாபனம் மேன்மேலும் வளரப்போகிறது. இவ்வாறு இந்தப் பணிக்குப் பயன்படும் படியாக எல்லா ஏற்பாடுகளையும் செய்தவர் தேவாலயமந்திரி கனம். வேங்கடசாமி நாயுடுதான். சில தினங்களுக்கு முன்பு

நாம் திருப்பதிக்குப் போயிருந்தோம். அங்கு நாயுடு அவர்களுடைய நிர்வாக நேர்மையால் விளைந்த யாத்திரீகர்களுக்கு வேண்டிய வசதிகள் எல்லாவற்றையும், திருப்பணிகளையும் பார்த்தோம். ஆண்டவனுடைய பணத்தை அவனை வழிபட வரும் அடியார்களுக்குத் தங்குமிடமாக — கைங்கர்யங்களுக்காக — ஆலயத்திருப்பணிகளுக்காகச் செலவிட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. இந்தக்காலத்தில் இவருடைய முயற்சியால் எங்கும் தேவார திவ்யப்பிரபந்தங்கள் ஒலிக்கப்படுகின்றன. பகவத்புராணங்கள் படிக்கப்படுகின்றன. எங்கும் ஒரே அன்பு மயமாக உலகம் திகழ்ந்து வருகிறது. மக்கள் ஆண்டவனுக்குக் காணிக்கைகளை அர்ப்பணிக்கிறார்கள். ஆண்டவன் பணத்தை, பக்தர்கள் சௌகரியத்திற்காக — அநாதைகளைக் காப்பதற்காகச் செலவழிப்பதே சிறந்த சேவை என்பது இவர்களது எண்ணம்.

நமது ராஜாஜி அவர்களோ மிகுந்த உறுதிப்பாடுடையவர். அரசியல் பீடத்திலிருந்துகொண்டே — முதலமைச்சராயிருந்துகொண்டே இறைவன் திருவருள் இருந்தாலல்லது ஒன்றும் நடக்காது; ஒன்றும் சிறக்காது; ஒன்றும் பயன் தராது; ஆதலால் அவன் திருவருளைப் பெறுவதற்கு வழிபாடு ஒன்றுதான் நாம் செய்யும் வேலை. வழிபாடு என்றால் கை குவித்தல் கீழேவிழுந்து வணங்குதல் அவ்வளவே என எண்ணாதீர்கள்! மனம் பக்தியில் ஈடுபட்டு அவைகளைச் செய்ய வேண்டும். பக்திஒன்றால்தான் இறைவனைக்கட்டுப்படுத்தலாம் என்று உறுதியோடு சொன்னவர் இவர். எடுத்த எடுத்த இடங்களிலெல்லாம் இறைவன் கருணையும் பக்தி மார்க்கமும் இல்லாத பேச்சே இவரிடம் இல்லை. இவரால்தான் இன்றைக்கும் பக்திமார்க்கம் நாட்டில் பரவிவருகின்றது. அதனால் இவர் வெறும் அமைச்சரல்ல. ஆண்டவனுக்குப் பணிசெய்யுங்கள்; அவனுக்குச்செய்யுந் தொண்டுகள் யாவும் மக்களை மகிழ்விக்கும் வழி என்பது இவர்கள் உறுதி. இவர்களுடைய ஒவ்வொருகாரியங்களிலும் "மலையே வந்து வீழினும் மனிதர்காள்! நிலையிற் கலங்கிடேர்" என்ற அருளாண்மை தொனிக்கின்றது.

நமது ராஜாஜி அவர்கள் காஞ்சிப்பேச்சில் "ஒற்றை மாமரத்தை வைத்துக்கொண்டு ஏகாம்பரேஸ்வரரிடம் பக்தி செலுத்துவதைப்போல பழைய ஸ்தாபனமாகிய காங்கிரசை வைத்துக்கொண்டு சுயராஜ்ய சுகத்தை அநுபவிக்க வேண்டும்" என்றுர்கள். இந்த வார்த்தைகளை உலகம் இன்னும் நன்ருக ஆழ்ந்து அநுபவித்துப் பார்க்கட்டும். மாமரம் கொட்டையிலிருந்து உண்டானது. காங்கிரஸ் பல இந்தியப் பெருமக்களுடைய தியாக விதையிலிருந்து முளைத்தது.

மாஞ்செடிக்கு உரம்பொருந்திய மண்ணும் பருவ மழையும் வளர உதவின. காங்கிரஸிற்கு மக்கள் மன உரமும் உழைப்பும் வளர உதவின. மாமரம் ஆணிவேராலும் பக்கவேராலும், ஒன்ருய் முளைத்துப் பலவாய் விரிந்து புயற் காற்றுக்கும், பெருமழைக்கும், வேர்ப்பூச்சிக்கும், சிதலுக்கும் தப்பிப் பலருக்கும் பயன்படுகிறது. காங்கிரசும் தெய்வ நம்பிக்கை என்ற ஆணிவேரில் இன்றைய மக்களுடைய தியாகம், தொண்டு, அன்பு, ஆதரவு என்ற பக்கவேர்களால் பலப்பட்டு நிற்கிறது. தென்ஞட்டில் இந்த காங்கிரஸ் மாமரத்தின் பெரிய காவலாளியாக இருப்பவர் நமது ராஜாஜி. இவர் நீடுவாழ்க."

என்று அருளிச் செய்தார்கள்.

வரவேற்பிதழ்:

தருமபுர ஆதீனம் வித்துவான், மௌன சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் கனம். ராஜாஜி அவர்களுக்கு வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பெற்றது. அந்த இதழ் அழகான தஞ்சைச் செல்வமாகிய நெல்மணிகளால் இயன்ற பேழையில் வைத்து வழங்கப்பெற்றது. அச்சிட்ட வரவேற்பிதழ் அனைவர்க்கும் வழங்கப்பெற்றது. அவ்வரவேற்புரையையும் பாருங்கள்:-

கண்ணன் காட்டிய வழிநின்று பயன்கருதாப் பணிபுரிய மக்களைப் பயில்விக்கும் பெரியோய்!

உற்றகாலத்து உறுதுணையான பெருந்தலைவ! ஒன்றோடொன்று ஒவ்வாத உதிரிக் கொள்கைகளால் நாட்டிற்கு நேர இருந்த அல்லலைத் தக்ககாலத்துப் பதவியேற்றுப் பாதுகாத்த செயலைத் தமிழுலகம் என்றும் மறவாது.

கருத்து ஒருமித்த கண்ணிய வருக!

பழையமக்கள் படிப்பைநாடிக் குருகுலம் சென்றார்கள்; உபதேசம்நாடிச் சமய நிலையங்களைச் சார்ந்தார்கள்; "ஓடி வரும் காரணர்க்கு உண்மைவை" என்பதே ஞானபீடங்களின் நோக்கங்களாக இருந்தன. பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டு மாணாக்கர்களைத் தொகுத்துப் போதிக்கும் முறைமையால், மற்றத் துறைகளில் கல்விநிலை வளர்ந்தது; சமயநிலையோ அந்த அளவு வளர்ச்சியின்றி இருந்தது. காலநிலைக்கு ஏற்ப ஆதீனம் திருவிழாத்தோறும், கழகங்கள்தோறும் சென்று சென்று பிரசாரம்செய்தது. இந்நிலையில் உண்டான சிறிது வளர்ச்சியைக்கண்டு, வருங்காலத்தில் சமயத்துறையில் ஊக்கமுடன் சிறந்த பணி செய்யவேண்டிய இளைஞர் உள்ளத்திலே கடவுளுணர்ச்சி பதிதல் நல்லது என்று எண்ணி வேதபாடசாலை — ஆகமபாடசாலை — தேவாரபாடசாலைகளை ஏற்படுத்திற்று. பொதுமக்களிடையேயும் கலந்து பழகிச் சமய உணர்ச்சியைப் பரப்ப வடமொழி தென்மொழிக் கல்லூரிகளை வகுத்தது. மாதப்பத்திரிகைகள் வாயிலாகவும், சிறந்த நூற்பதிப்புகள் வாயிலாகவும் சமயப் பிரசாரத்தை நடத்தி வருகின்றது. தமிழ்நாடு முழுவதும் சென்று சமயம் பரப்பப் பிரசார வாகனங்களை ஏற்படுத்தியது. இவற்றுலெல்லாம் பொது மக்களது ஆதரவு மிகுந்திருத்தலைக் கண்டு தலைநகரிலும், அவற்றைச்சார்ந்த பேட்டைகள்தோறும் பிரசாரம் செய்து நல்ல பயனிருப்பதையறிந்தது. எப்பொழுதும் தலைநகரில் ஒரு நிலைத்த ஸ்தாபனமிருந்தால் அறிஞர் கூட்டுறவையும், பிரசாரவன்மையையும் பெரும் அளவில் பெற்று,

தெய்வ நம்பிக்கையைப் பலப்படுத்தலாம் என்று துணிந்தது. இந்தச் சூழ்நிலையில், ஆட்சிபீடத்து அமர்ந்த தாங்களும் கடவுட்கொள்கையின் இன்றியமையாமையை எடுத்துக் காட்டி வருவது பேராதரவாக இருந்துவருகிறது.

ஆதீனம் சென்னையில் பிரசார நிலையத்தை ஸ்திரமாக ஏற்படுத்திச் சமயப் பணிபுரியத் தொடங்குகிறது. கருத்து ஒருமித்த தாங்கள் அந்த நிலையத்தைத் திறந்துவைப்பது மிகச் சிறப்பானது. எல்லாம்வல்ல இறைவன் கருணை சமயநிலை வளரவும், மக்கள் நன்னெறி ஒழுகவும், இன்பம் ஓங்கவும் துணைசெய்யுமாக."

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் அனுப்பிய அக்ஷதையும், பிரசாதங்களும் ராஜாஜியிடம் ஸ்ரீ கே. பால்சுப்ரமண்யம் அவர்களால் அளிக்கப் பெற்றன. மகாசந்நிதானமவர்களுக்கு ஸ்ரீகாசிமடம் இளவரசு வித்வான், ஸ்ரீலஸ்ரீ காசிவாசி மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் சார்பாக வாழ்த்துமலர் ஒன்று அளிக்கப் பெற்றது. வந்திருந்த வாழ்த்துச்செய்திகள் வாசிக்கப்பெற்றன. அடுத்து,

சென்னை **'பல்கலைச் செல்வர்'**

திரு. தெ. பொ. மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்,

"ஆண்டவனைத் தேடிச் செல்லுகிறவர் பலர் முன்பு இருந்திருக்கலாம், இன்றும் சிலர் இருக்கலாம். ஆனால் இன்றைய நிலையில் ஆண்டவனே தான் வந்து நம்மை ஆட்கொள்ள வேண்டும். தருமபுர ஆதீன கர்த்தர் தருமபுரத்திலேயே இருந்தால் உலகம் அறிவது கஷ்டமென்று அறிந்து, சென்னையிலும் தமிழ் நாட்டிலும் திருவருளை வாரிவழங்க முற்பட்டுள்ளார். அமைதி என்ற பொருள் இன்று இருக்கிறதா என்று கேட்க வேண்டியிருக்கிறது. தமிழர்க்குப் புதிய வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அன்பு, அறிவு, இன்பப் பண்பாட்டை நாம் காப்பாற்றப் போகிறோமா என்பது தான் கேள்வி. இதற்கு ஆற்றலும் உறுதியும் தேவை. தமிழ்நாடு அல்லல்படுகிறது. உள்ள

துடிக்கிறது. இந்நிலையில் ராஜாஜியின் வெற்றிக்கு அரசியல் மேதைமட்டும் காரணமில்லை. அவரது உள்ளத்திலிருந்து ஊற்றாகப் பாயும் அன்பும் கடவுளருளுந்தான் காரணம். ராஜாஜியின் முயற்சி வெற்றி பெற மக்கள் ஒத்துழைப்பு வேண்டும். அதிலும் இளைஞர் ஒத்துழைப்பும் உறுதியும் மிகவேண்டும்" என்று பேசினார்கள். பிறகு, பலத்த கரகோஷங்களுக்கு இடையே எழுந்துநின்று, நிலயத்தின் திறப்புரையாக,

கனம் ஸ்ரீ இராஜாஜி அவர்கள்

தண்ணீரில் தயிர் :

இன்று நான் பதவி வகிக்கும் ஸ்தானம் கஷ்டமானதாகும். சாதாரணமாகத்தண்ணீரில்தயிரைக்கலந்து மோராகப்பண்ணித் தருபவன் நான். கடவுள்ஞான அறிவை மோராக இப்படிச் செய்து நடந்து வருபவன் நான். கடவுள்ஞானம் சாஸ்வதமாக ஏற்பட்ட நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது. பெரியவர்கள் இவ்வளவு பேர் கூடிய இடத்தில் எப்படிப் பேசுவது என்று தயங்கினேன். அதற்காகத்தான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரனாரை முதலில் பேசச்சொன்னால் என் கவலை குறையுமென நினைத்துப் பேசச் சொன்னேன். ஆனால், அவர் பேசியதால் என் கவலை அதிகரித்ததே ஒழியக் குறையவில்லை. நாமொன்று நினைக்க நடப்பது வேறு விதமாக இருக்கிறது

மடங்கள் பற்றி, தனக்கு அதிக அனுபவம் கிடையாது என்றார் ஸ்ரீ மீனாட்சிசுந்தரனார். அவரைவிட எனக்கு அனுபவம் குறைவு. மடங்களுக்குப் போகவேண்டியசமயம் வரும் போது எப்படியாவது தப்பித்துக்கொண்டிருக்கிறேன் நான். அம்மாதிரி ஒரு இடத்திற்குப் போனால், அந்த ஸ்தானத்திற்கேற்ப நடக்கவேண்டும். எனக்கு அளிக்கப்பட்ட பயிற்சியோ அதற்குத் தகுந்தவாறு இல்லை. என்தோற்றம் மனதிற்கு வெறுப்புண்டாக்கும் தோற்றம். ஆகவே மடங்களுக்குப்போக எனக்குக் கூச்சம் ஏற்படுகிறது. நான் வைதிக குடும்பத்தில் பிறந்தவன்தான். ஆனால், இந்தக் காலத்திற்கேற்ப எனக்குப் பெரியவர்கள் பயிற்சி அளித்துவிட்டார்கள். அதனால் வைதிக முறை தவறிப் போய்விட்டது தவறிப்போன முறையைப்

புதிதாக ஆரம்பித்தால் அது வேஷம் என்று வேறு சொல்வார்கள். ஆகவே, என்பாட்டுக்கு வாழ்க்கையை நடத்திப் போகிறவன் நான். என் குடும்பத்தைச் சேர்ந்த மடங்களுக்கு என்னை வரச்சொல்வார்கள். நம்மைச் சேர்ந்த ஒருவன் இப்படி பதவிக்கு வந்திருக்கிறானே என்று மகிழ்ச்சி அவர்களுக்கு. சந்நியாசியானாலும் இது விடுவதில்லை. கூப்பிடுவார்கள். கூச்சம் பயம் காரணமாகப் போகாமல் ஏமாற்றிக்கொண்டு வந்திருக்கிறேன். ஏதாவது ஒரு கூட்டம் கழகம் இவைகட்குப் போனால், அதற்குத் தடங்கலாக இருக்காமல் கலந்து நிற்கிறமாதிரி இருக்கவேண்டும். அப்படியானால்தான் போகவேண்டும்.

நமது ஸ்ரீ வேங்கடசாமி நாயுடு என்னைவிட தைரியசாலி. அவர்தான் என்னை இங்கு வரும்படி வற்புறுத்தினார். அதனால், இப்பொழுது இந்த மடத்தில் நான் அகப்பட்டுக்கொண்டிருக்கிறேன், பாடு என்றால் வழக்கமாகப் பாடுகிற மாதிரி எனக்கு பாட்டு வரவில்லை. அதோடு என்னை எல்லோரும் புகழ்ந்துவிட்டதால் எனக்கு இருந்த ஸ்திர புத்தியும் குழம்பிப் போயிருக்கிறது.

மௌனம் ஏன் ?

எதற்காக என்னைப் புகழ்கிறார்கள். என்னைப்போல இத்துறையில் ஈடுபட்டிருந்தவர்கள் சொல்லாமல் மௌனமாக இருந்த விஷயத்தை நான் தைரியமாகச் சொன்னேன். தர்மம், கடவுள்பற்றி பேசக்கூடாதென்று மௌனயோகம் மேற்கொண்டிருந்தபோது, நான் அதுபற்றி மௌனம் ஏன் என்று பேசினேன். அதுபற்றிப்பேச எல்லோருக்கும் ஆசை. ஆனால் அந்த ஆசையை அவர்கள் அடக்கிவைத்துக்கொண்டிருந்தார்கள். ஆசையை அடக்குவது கஷ்டமானதே. கட்டுப்பாட்டின்படி மௌனம் சாதித்தார்கள். நான் அந்தக் கட்டுப்பாட்டை மீறினேன், தர்மம், கடவுள் இவைபற்றிப் பேசினேன். இதரர் பேசாமலிருந்ததை நான் பேசியதால் மக்களுக்குச் சந்தோஷம். ஆதலால் என்னைப் புகழ்கிறார்கள்.

தர்மாமீட்டர் :

இந்தப் புகழ் ஒரு ஊக்கம், தைரியம் அளிக்கிறதே ஒழிய, இதனால் வேறு பயன் கிடையாது. புகழ்வதைக்கண்டு ஏமாந்து

விடக்கூடாது என்பதை எடுத்துக்கூற விரும்புகிறேன். அது ஒரு நல்ல தர்மாமீட்டர் போலுள்ளது எனலாம். புகழ்வதில் பலனை எதிர்பார்த்துப் புகழ்கிறவர்கள் உண்டு. இவன் செய்வது நல்ல காரியம் என்று உண்மையில் உணர்ந்து சொல்கிருர்களே அது நல்ல தர்மாமீட்டர் போன்றது. மற்ருெரு புகழ் தப்பு தர்மாமீட்டர் மாதிரி. தர்மாமீட்டர் ஜுரமிருப்பதைக் காட்டும். அது மருந்தல்ல. மருந்தென்று முன்பு சிலர் நினைத்தார்கள். கண்ணுடி வைத்துக்கூட டாக்டர் பார்த்தார். ஜுரம் குறைய வில்லையே என்று குறைபட்டார்கள். புகழ்வதைக்கண்டு ஏமாந்துவிடக் கூடாது என்பதற்காக இதைச் சொல்கிறேன். இதனுல் நன்மை ஏற்படாது. ஒரு வேளை தீமை வேண்டு மானுலும் ஏற்படலாம். ஏற்படாது என்று நம்புவோமாக. புகழவேண்டாமென்ருல் அதை வேறு தப்பாக நினைத்துக் கொள்வார்கள்.

தலை சீர்பட்டால் உடலும் சீர்படும் :

தருமபுர ஆதீனத்தவர்கள் தங்கள் சேவையைத் தமிழ் நாட்டின் தலைநகராகிய சென்னைப் பட்டினத்திற்கே கொண்டு வந்திருக்கிருர்கள் என்கிருர்கள். இது தலைநகரந்தான். தலை என்ருல் பேன் சேரும்; அழுக்கு சேரும். அவற்றை ஒழிக்க ஏற்பாடு செய்கிருர்கள். இது சரியே. கெட்டுப்போன ஊரைச் சீர்படுத்தத்தான் தருமபுர ஆதீனத்தவர்கள் இம்முயற்சியில் ஈடுபட்டிருக்கிருர்கள். தலை சீர்பட்டால் உடலும் சீர்படும். உடல் முழுவதும் சரிப்படுமென்று நம்பிக்கை. தலைநகரில் செய் யப்படுவதால் தமிழ்நாடு முழுவதும் பயனடையும். தலைநகருக்கு வருவதால் ஆதீனம் பிரகாசிக்கும் என்று அவர்கள் இங்கு வரவில்லை. ஆதீனத் தலைநகரம் தருமபுரம்தான். ஆனுலும் தலையைச் சீர்படுத்த இங்கு இந்த நிலையத்தை ஆரம்பித் திருக்கிருர்கள்.

சந்தேகம் இல்லை :

தருமபுர ஆதீனத்தின் வேலைபற்றிப் புகழ்ந்து பேசப் பட்டது, அவர்கள் நல்ல சேவைசெய்து வருகிருர்கள். இதுபற்றிச் சந்தேகமே இல்லை. முந்தைய காலத்தில் அந்தந்த காலத்திற் கேற்ப குறிப்பிட்ட வேலையைச்செய்ய மடங்கள் ஏற்பட்டு

564

வேலையைச் செய்துவந்தன. வேலை செய்துகொண்டிருந்தால் தான் உயிர் என்பது இயற்கை நியதி. வேலை செய்யாமற் போனால் உயிர் குன்றி மறைந்துவிடும். ஆலயங்களில் பூஜை நடக்காவிடில் அது குட்டிச்சுவராகிவிடும். பின்னர், அந்நிய நாட்டார் ஸ்தம்பம் முதலியனவற்றைச் சிற்பம் கலை இவை களுக்காகப் பார்ப்பார்கள். சிற்பத்தினை எடுத்துக் காட்டுவதாக அது இருக்கும். பின்னர் முடிவில் அது மறைந்துவிடும்,

என்னை நம்புங்கள் :

அதேபோலத்தான் மடங்களும். முன் காலத்தில் ஒரு காரி யத்திற்காக ஏற்பட்டன. மக்களுடைய மனதில் பக்தியைத் திரட்டித் தொண்டு செய்தன. காரியம் குறைந்ததும் ஒரு வியாதி ஏற்பட்டுப் போகிறதுபோல் ஏற்பட்டுப் போகிறது. நிலையை உணர்ந்து மடம் என்ன காரியம் செய்யவேண்டு மென்பதை அறிந்து மடங்களுக்குப் புத்துயிர் அளிக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. ஆதீனத்தார் சாமர்த்திய மாக - தைரியமாக ஏற்பாடுகளை ஆரம்பித்திருக்கிறார்கள். சென்னைப் பட்டினத்தில் இது முக்கியமான நிகழ்ச்சி. இதை திருவிழாவாகக் கொண்டாடுவது சரியே. எவ்வளவு விரைவில் சிறப்பாகக் கட்டிடத்திற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த இடத்தை இப்படி அலங்கரித்திருக்கிறார்கள். நான்கு நாளானால் இதெல்லாம் போய்விடுமே, இடம் திறந்தவெளி யாகிவிடுமே என்று வருத்தம் ஏற்படுகிறது. இங்கு ஸ்திரமான மண்டபத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இப்போது எதற் கெல்லாமோ மண்டபம் கட்டுகிறார்கள். இந்த நல்ல காரியத் திற்கு மண்டபம் நிறுவுவது அவசியம். இது என் ஆசை. இங்கு மண்டபம் எழ எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். எதற் கெல்லாமோ லாட்டிரியில் பணம் போடுகிறீர்கள். இதனால் லாபமுண்டென்று இவன் சொல்லுகிறான், என்று நம்பலாம் என்றாவது என்னை நம்பி இந்த காரியத்திற்குப் பணம் போட்டு வைக்கும்படி, பணமிருப்பவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

பக்தியோடு நிற்கும்போது சர்ச்சை ஏது ?

இந்த விழாவிற்குச் சங்கராச்சாரியார் வாழ்த்து அனுப்பி யிருக்கிறார்கள். மடங்கள் எல்லாம் பக்தியை உண்டாக்கு

வனவே. பொதுவாக இதில் வித்தியாசமில்லை. அதை விட்டு அதற்கு மேலாக ஞானமார்க்கம் என்று போகும்போதுதான் அபிப்பிராய பேதங்கள் எழுகின்றன. இந்த வழி நல்லதா? அந்தவழி நல்லதா? என்ற சர்ச்சை எழுந்துவிடுகிறது. பக்தியோடு நிற்கும்போது சர்ச்சை இல்லை. அதற்கு மேலேபோய் அறியக்கூடாததை அறியவேண்டுமென்கிற துராசை ஏற்படும் போது ஆண்டவன் ஒரு சவுக்கடி போடுகிருர். சர்ச்சை கிளம்பி பேதங்கள் ஏற்பட்டவுடன் மடங்களில் குடுமியைப் பிடித்துக் கொண்டு ஆடுகிருர்கள். எனக்குத் தெரிந்த பாஷையில் இப்படிப் பேசுவதற்கு மன்னிக்கவும். சண்டை ஏற்பட்டுப் போகிறது. எல்லாத் தர்மங்களும் எல்லாச் சமயங்களும் ஒன்றுக்கே வழிகாட்டுவன என்பதுதான் உண்மை. அதை மறந்து ஞான மார்க்கத்தில் அத்வைதமா? த்வைதமா? விசிஷ்டாத்வைதமா? என்ற சர்ச்சை எழுந்துவிடுகிறது. சைவம், வைஷ்ணவம் என்ருல் நமக்குப் புரிகிறது. அத்வைதம் த்வைதம் புரியாதது.

இப்படிச் சர்ச்சை எழும்போது இதற்கு மருந்துதரக் கடவுளே ஏற்பாடு செய்கிருர். கடவுளே இல்லையென்று ஒரு சிலரைச் சொல்லக் கிளப்பி ஏற்பாடு செய்கிருர். கடவுளை அறியும் வழிக்காக சண்டைபோட்டுக் கஷ்டப்பட்டோம். இப்போது கடவுளே இல்லை என்கிருர்களே சிலர் என்று எல்லோருக்கும் திகில் ஏற்பட்டு விடுகிறது. கிறிஸ்தவர்கள் முஸ்லீம்கள் எல்லோருக்கும் கிலி ஏற்படுகிறது. இது கடவுள் ஏற்பாடு தான். ஏனெனில் அவனன்றி எதுவும் நடக்காது. வித்யாச பாவனைகளை மறந்துவிட்டு மொத்தமாக எல்லோரும் ஒன்று சேருகிருர்கள். இது ஆண்டவனின் லீலை. இங்கு இஸ்லாமியர்களுக்கு இடமில்லை, கிறிஸ்தவர்களுக்கும் இடமில்லை என்பதில்லை. எல்லோரும் ஒரே வேலையை – சமய வேலையைத்தான் செய்கிருர்கள். சங்கராச்சாரியார் மடத்துக்கும் தருமபுர மடத்திற்கும் வித்தியாசமுண்டு. இருவரும் சிவன் கோயிலுக்குப் போகிருர்கள் என்ருலும் மூலக் கொள்கை மாறுபட்டது. இன்று பொதுவாகச் சமயப்பணி என்று சேர்கிருர்கள். சங்கராச்சாரியார் மடத்திலிருந்து வாழ்த்துச்செய்தி வந்திருக்கிறது.

சூடுபட்ட பூனை ;

வைஷ்ணவ மடத்தினர்கள்தான் இன்னும்வரவில்லை. அவர்களுக்குப் பயம் அதிகம். ஆரம்பத்திலிருந்து கஷ்டப்பட்டவர்கள்

அவர்கள். சூடுபட்ட பூனைபோல் பயப்படுகிறார்கள். 'எங்களுக்கா பயம்' என்று அவர்கள் கண்டிக்கலாம். பயமில்லை என்றால் வந்து சேருவதுதானே! ஸ்ரீ சங்கராச்சாரியாருக்கு ஆயிரம் கண். அன்றாடம் நடப்பதைப் பத்திரிகை படித்தும் தெரிந்து கொள்கிறார்கள். அகோபில மடம், வானமாமலை மடம் முதலியனவற்றிற்கும் தெரியும்; ஆனால் கொஞ்சகாலம் பிடிக்கும்.

இந்த நிலையம் பக்தி மார்க்கத்திற்காக ஏற்பட்டுள்ள நிலையம். அறியக்கூடாத பொருளை அறியும் வீண் முயற்சி இல்லை இது.

கடின பாஷையில் கருத்து உண்டு:

ஒரு விஷயத்தைக் கஷ்டப்பட்டு தெரிந்துகொண்டால்தான் திருப்தி ஏற்படுகிறது. அதற்காகத்தான் கடினமான பாஷை போட்டுப் புத்தகங்கள் எழுதுகிறார்கள். அதைப் படித்துக் கஷ்டப்பட்டுப் புரிந்துகொண்டால் நமக்கும் தெரிந்ததே எனத் திருப்தி ஏற்படுகிறது.

விலைகொடுத்து வாங்குங்கள்:

ஆதீனத்தில் புத்தகங்கட்கு விலை சரசமாகப்போட்டிருக்கிறார்கள். விலை ஏன்? பெயரே தருமபுர ஆதீனமாயிற்றே; தருமமாக விநியோகிக்கக்கூடாதா என்று கேட்கலாம். விலை இல்லையென்றால் ஒருசில பிரதிகளே அச்சிட்டு விநியோகிக்க முடியும். ருசியான மாம்பழத்தைத் தின்கிறோம். கொட்டையைத் தூக்கி எறிந்துவிட்டால் மறுபடி பழந்தின்ன முடியுமா? எங்காவது போட்டுவைத்திருந்தால் முளைத்திருக்கும். காலாந்தரத்தில் பழம் கொடுக்கும். தின்னலாம். அதுபோல விலை கொடுத்தால் கிடைப்பதைக்கொண்டு மேலும் பிரதிகள் அச்சிட்டு இதரருக்கும் தரமுடியும். ஆகவே, விலைகொடுத்து வாங்குவதைத் தருமமாகக்கொள்ளலாம்.

பாடல் தேன்போன்றவை:

இந்த நிலையத்தில் விழாக்கள் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். மக்களுக்குப் பக்தி ஏற்பட்டு வளரச்செய்வது

முக்கியம். நல்ல நாதஸ்வரக் கச்சேரிகளை அவ்வப்போது குறிப்பிட்ட காலத்தில் ஏற்பாடு செய்யலாம். திருவிழா நடத்தினால் பக்தி வளரும். முதலில் பிரசாதத்திற்கென வருகிறார்கள். காத்திருந்து பகவான் பாதத்திலிருந்து கிடைத்தது என்று தெரிந்ததும் பக்தி ஏற்பட்டு விடுகிறதல்லவா? நல்ல பிரசாரகர்களை தருவித்து ஆழ்வார், நாயன்மார்கள் பாட்டைப் பாடச்சொல்லி அர்த்தம் விளக்கவேண்டும். அவை தேன் போன்றவை. இதற்காகத்தான் மண்டபம் கட்டப்படவேண்டும் என்கிறேன். இந்தக்காலத்தில் இது சிரமமானதல்ல. சினிமாவுக்கு என்றால் மூன்று மாதகாலத்தில் கட்டிடம் வந்துவிடவில்லையா?

என்று பேசிமுடித்தார்கள். பிறகு, தேவாலய மந்திரி

கனம் திரு. K. வேங்கடசாமி நாயுடு அவர்கள்

The Dharmapuram Adhinam is one of the biggest religious organisations in the South. A number of temples nearly 23 are managed by this Adhinam besides several Kattalais. I have visited a number of temples managed by the Adhinam and I am glad to say that they are well kept and clean.

TEMPLE RENOVATION.

A lot of thiruppani or renovation work is going on in various temples. The Vaideeswarankoil which is one of the biggest temples under the Adhinam is an ideal institution worth visiting So in the matter of renovation and Kumbabishekam of Devasthanam this Adhinam takes a leading part.

RELIGIOUS PROPAGANDA,

In the work of religious propaganda they have done a great deal. They have got a big religious library at Dharmapuram. They hold religious classes and train people in Agama, Veda. Thevaram and other sacred texts. They hold annual conferences at which leading Pandits are invited for discourses. What surprises me most was that in the premises

568

of the Adbinam all religionists are invited to preach their tenets. This catholicity of religious outlook is a great feature of this Adhinam. While giving the greatest consideration and importance to Saiva Siddhanta they have been liberal in encouraging other co-religionists in their pursuit of religious studies.

HUMANITARIAN WORK.

They also maintain several schools and an orphanage at Vaideeswarankoil, I understand they have also some places where medical relief is also given. These humanitarian services are greatly appreciated by the public.

PUBLICATIONS.

They have a good printing press and have published nearly 300 books so far. It is a great achievement. What we want most is knowledge and such knowledge they are disseminating by means of pamphlets, booklets and valuable literature on Saiva Siddhanta.

HIS HOLINESS THE PANDARASANNADHI.

Sri Subramania Desika Gnanasambandha Paramacharya Swamigal the present Adhinakarthar is very liberal in his outlook and has an anxiety to move with the public and understand their difficulties and requirements first hand. He has left off formalism and moves with the people as popular leaders in religion. He has started many good works which have won for him great admiration of the devotees.

THIS MADRAS CENTRE.

We are happy that to extend the range of activities they have chosen to open a religious and cultural centre in Madras. This is a great step to popularise the cult of the mutt. I understand they will have a big library here which will be

opened to the public. They will conduct Thevaram classes and convene periodical conferences on religious subjects The books published by the Adhinam will be available for sale here and I am sure the public will be profited a great deal thereby. They will also have an Information Centre where they will give information about the activities of the Adhinam and information about the various temples, festivals etc. to the public.

OUR DUTY.

My great desire is that Madathipathis and religious heads should take great deal of interest in public affairs and work for the moral upliftment of the people. They can help to evolve a society which will be able to meet the heavy responsibility of a democratic state. At present after the achievement of independence we have fallen into a mood of lethargy and the freedom is not understood properly at this juncture. Several other countries are doing their propaganda especially the communists who preach so much on non-Godly lines. The Dravida Kazhgam are creating bad impression about our temples and temple adminstration. Their glamour for the western institutions have made them dislike our temples and temple life. Some other religionists in order to preach their own religion have condemned our institutions. I do agree that there are several defects which have to be remedied But I do plead that there are very many important factors which have made Hinduism the leader in World thought in religion and philosophy and even now there are great factors which if properly appreciated will make for a society of good and pious men. In this endeavour all our Madathipathis and religionists should combine with the temple authorities to build up the society which will give stability and strength to India. I am glad the Matadhipathis have realised this and are coming forward to take their rightful place in our State. His Holiness Sri Sankaracharya Swami has given a wonderful

lead. The other Matadhipathis are also responding wonderfully. His Holiness the Pandara Sannadhi of Dharmapuram has launched on a wide range of useful work and we are thankful to him for the same.

In olden days the temple was the pivot on which the State moved. Dharma was the leading feature to guide State activities. The ruler of the State was first and foremost a Bhaktha. A pious and God fearing person is a great guarantee for good administration. It is a great fortune that Sri Rajaji has all the great qualities of piety, trust, justice and love. His leadership has greatly helped to restore the balance of moral life among the peoples of the State. It is our great fortune that this religious and cultural centre which has the fortune of being opened by Sri Rajaji will be the forerunner of more such institutions. I pray God that our true principles of Dharma will guide us in our activities in helping the state and the country to hold its rightful place in the comity of nations. May God help.

என அருமையாகப் பேசினார்கள். அடுத்து,

திரு. ராஜா ஸர் M. A. முத்தையா செட்டியார் அவர்கள்

"அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தின் மூலம் சமய ஸ்தாபனங்கள் பாதிக்கப்படுமென்ற பயத்தினால் அச்சட்டத்திற்கு எதிர்ப்புத் தோன்றியது. ஆனால் அந்தப் பீதிக்கும் கிலிக்கும் இடமில்லை என்று பின்னால் தெரிந்து விட்டது. தருமபுர ஆதீனம் தமிழுக்கும், தமிழ் நாட்டுக்கும், சமயத்திற்கும் செய்து வரும் பணிகள் பல. 'தமிழ் நாட்டுக்குச் சென்னை தலை நகராகக் கிடைத்த பெருமைக்கு இந்த மகான் ராஜாஜி ஒருவர் தான் காரணம். மற்ற எல்லோரும் கூடி முயன்றாலும் 'முயன்றும் தோல்விதான்' என்ற பேச்சுதான் இறுதியில் வந்திருக்கும். இந்த மகான் ஒருவரால்தான் அதில் வெற்றி காண முடிந்தது. ஆந்திர நாடு பிரிவதற்கு அவர் செய்த அருந்தொண்டு பலருக்குத்

தெரியாது. அறிந்த சிலரில் நான் ஒருவன். கர்நூலில் ஆந்திரர்கள் விழாக் கொண்டாடு முன்பு, நாம் இன்று ராஜாஜி தலைமையில் தமிழ் விழாவாகவே இங்குக் கொண்டாடுகிறோம்'. தருமபுர ஆதீன கர்த்தர் செய்து வரும் நல்லகாரியங்கள் எல்லோரும் பாராட்டத்தக்கன"

என்று ஆதீனப் பணிகளைப் பாராட்டினார்கள். பிறகு,

திரு. K. பாலசுப்பிரமணிய அய்யர் அவர்கள்

"ஸ்ரீராமன், ஸ்ரீ கிருஷ்ணன் காலத்திலேயே நாஸ்திகம் இருந்தது. அப்பொழுதிருந்த வலிமையுள்ள நாஸ்திகம் இப்பொழுது இல்லை; நாஸ்திகர்கள் காரணமாக ஆஸ்திகர்களுக்கு ஊக்கமும் சமயப் பற்றும் வளருவதாகவே கருதவேண்டும். சமயத் துறையில் சர்க்கார் தலையீடுக்கு எல்லையுண்டு அதற்கு மேல் செல்லாமல், மடங்கள் அவற்றின் வேலையையும் கடமையையும் செய்ய விட்டுவிடவேண்டும்; ராஜாஜி 'மடங்களுக்குச் செல்ல முடியவில்லை. தட்டிக்கழித்துக் கொள்கிறேன். அதற்கேற்ற முறையில் இப்பொழுது நான் சென்றால் வேஷம் என்று சொல்வார்கள் அதற்காகபயப்படுகிறேன்' என்று கூறினார். வேஷம் ஒரு அளவுக்கு வேண்டும். போர்முனைக்குச் செல்லும்போது ஒரு அளவு வேஷம் இல்லையா ? ஏன் நாட்டின் சுதந்திரத்தைப்பெற காங்கிரஸ்காரர் (இன்றுவேண்டாமென்றாலும்) கதர் போடவில்லையா? ஆனால் வேஷத்தைக்கண்டு பயம் வேண்டாம். ராஜாஜியின் உள்ளத்தில் அன்பும் சமயப் பற்றும் நிறைந்து கிடக்கிறது. அதுவே போதும். அவர் எப்படி வந்தாலும் எங்கள் ஆச்சாரியார் ஏற்பார். ஆனால்,

'அபிசேத் ஸுதுராசாரோ பஜதே மாமனன் யபாக்
ஸாதுரேவ ஸமந்தவ்ய ஸம்யக்வ்யவஸிதோ ஹிஸ.'

இதில், ஆசாரத்தில் கெட்டவர்களே யாயினும் பகவானைப் பக்தியுடன் அணுகினால், அவர்களுக்கு நற்கதி கூறப்படுவதால் பகவானுக்குப் பாரபட்சமில்லையென்பது வற்புறுத்திக் கூறப்படுகிறது.

இப்படி கிருஷ்ண பரமாத்மாவே சீட்டுக்கொடுத்த பிறகு நான் சொல்லுவானேன்'

என்று கம்பீரமாகப் பேசினுர்கள்.

ஸ்ரீ எஸ். ராமசாமி நாயுடு அவர்கள் 'ராஜாஜி விரும்புகிற படி இங்கு மணிமண்டபம் அமைக்க ஆதீன கர்த்தர் அவர்கள் உறுதி கொண்டிருக்கிருர்கள்; மாம்பலத்தில் அஹோபிலமடம் ஒன்றும் அமைக்க ஏற்பாடு செய்யப்படுவதாக அறிகிறேன். எல்லாம்சேர்ந்து மக்கள் நலம்பெற உதவும்' என்று பேசினுர்.

பிறகு திருப்பனந்தாள் தேவஸ்தான தேவாரவகுப்பு மாணவிகள் தேவாரம் பாடினர். நிலையத்தில் நடைபெற இருக்கும் தேவார வகுப்பின் ஆசிரியராக இருக்கின்ற சங்கீத பூஷணம் திரு. P. சுவாமிநாத முதலியார் பிறகு பாடினுர். வித்துவான், ஸ்ரீமத் மௌனம் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நன்றி கூறினுர்கள்.

29—9—53 திருமுறை மாநாடு:

இரண்டாம்நாள் அதே விழாப்பந்தலில் திருமுறைமாநாடு தொடங்கிற்று கடவுள்வாழ்த்து பாடப்பெற்றது. வித்வான், ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் அனை வரையும் வரவேற்றுப்பேசினுர்கள். தருமபுர ஆதீன பல்கலைச் செல்வர் திரு. தெ பொ. மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் தலைமைவகித்துச் சிறப்பித்தார்கள்.

தலைமையுரையில் "ஏழாம் நூற்ருண்டில் நரசிம்மவர்ம பல்லவன் காலத்தில் வாழ்ந்தவர் ஞானசம்பந்தர். அக்காலந் தான் இலக்கிய கலாசார சமய மறுமலர்ச்சி ஏற்பட்டகாலம். தமிழ்நாட்டில் பல கற்கோயில்களைக் கட்டுவித்த மகேந்திர வர்மனை அப்பர் சுவாமிகள் சைவசமயத்திற்கு மாற்றினுர். ஓரளவு தமிழ்நாடு பழம்பெருமையோடு விளங்குகிறது - சைவ மும் தமிழும் தழைத்தோங்குகிறது என்ருல் அவற்றிற்கெல் லாம் அந்த இரண்டு பெருமக்களுந்தான் காரணம். அவர்கள் அன்று பட்டபாடு பெரும்பாடுதான். சத்தியாக்கிரகம் என்று சொல்லுகின்ருேமே அதிலும் நமது அப்பர்தான் முதலாக

நிற்கிறார். பெண்களின் பெருமைக்காகப் பாடுபட்டவர்களை எடுத்துக்கொண்டால் ஞானசம்பந்தரை முதலாகச் சொல்லலாம். அப்பரின் வாழ்க்கையை ஒவ்வொருவரும் அன்றாட வாழ்க்கையில் கொண்டொழுகவேண்டும். ஒருவருக்கு நெருக்கடி வருகின்றதென்றால் அப்பொழுது அப்பர் வாழ்க்கை உற்றதுணையாக உதவி நன்மைசெய்யும். அந்தக்காலத்தில் எவ்வளவோ அடக்குமுறைகளுக்கிடையில் சமய உறுதியில் கொஞ்சங்கூடத் தளராமல் இருந்தவர் அப்பரடிகள்" என்ற கருத்துக்களெல்லாம் வெளிவந்தன.

அடுத்து ஞானசம்பந்தர் சிறந்த ஆசாரியர்; அவருடைய வாழ்க்கையை உருவாக்கியதில் நம் மங்கையர்க்கரசியார்க்குப் பெரும்பங்கு உண்டு என்ற கருத்தைத் தெள்ளத்தெளிய ஸ்ரீ S. **மரகதவல்லி அம்மையார்** அவர்கள் விளக்கிப் பேசினார்கள்.

பிறகு டாக்டர் திரு. **தேவசேனாபதி** M. A. அவர்கள், சைவசித்தாந்த சாத்திரங்களுக்குள் பெருமையையும், மனித வாழ்க்கையோடு கூடிவிளங்கும் தகுதியையும் நமது ஆசாரியப் பெருமக்களுடைய வாழ்க்கைகள் எடுத்துக் காட்டுகின்றன என்று தேவார திருவாசகப் பிரமாணங்களுடன் மிக அருமையாகச் சொற்பொழிவாற்றினார்கள்.

தலைமையுரைக்குப் பிறகு ஸ்ரீமத் ராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் அனைவர்க்கும் நன்றி கூறினார்கள். கடவுள் வாழ்த்துடன் நிகழ்ச்சி இனிது முடிந்தது.

30—9—53

மூன்றாவது நாள் நிகழ்ச்சி, கடவுள் வாழ்த்துடன் சென்னை சொல்லின் செல்வர் **திரு. ரா. பி. சேதுப்பிள்ளை B.A., B.L., அவர்கள்** தலைமையில் தொடங்கிற்று. வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். பிறகு தலைவர் திரு. பிள்ளை அவர்கள்,

"நம்முடைய ஊக்கமின்மை காரணமாகத் திருப்பதியைத் தமிழ்நாட்டிற்குக் கிடைக்காமல் நாம் விட்டுவிட்டபோதிலும் அப்பதியில் எழுந்தருளியுள்ள திருமால் நம்மை விடமாட்டார். தமிழ்நாட்டு ஆழ்வார்கள், காவியங்கள், அருள் நூல்கள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம் யாவும் திருப்பதியையே தமிழகத்தின் வட எல்லையாகப் பறைசாற்றியிருக்கின்றன. என்றேனும் ஒரு நாள் திருவேங்கடம் தமிழ்நாட்டின் வட எல்லையாக வந்துவிடும். பண்டைக்காலம் முதல் சான்றோர் காட்டிவந்துள்ள அந்த எல்லை நம்மைவிட்டு அகலாது. இக்காலத்திலும் வடவேங்கடத்தையே பாரதியாரும் தமிழ்நாட்டின் எல்லையாகக் குறிப்பிட்டுள்ளார். புலவர் வாக்கும் சான்றோர் மொழியும் பொய்யாகிவிடுமா?

வடநாட்டிற்கு இல்லாத ஒரு தனிச்சிறப்பு தென்னாட்டிற்கு இருக்கிறது. அதுதான் இங்குக் காணப்படும் ஆலயங்களும், அறநிலையங்களும். ஊரைக் குடியிருப்பாக அமைக்குமுன்பே ஆண்டவனுக்கு இடம் அமைப்பது தமிழ்நாட்டின் தொன்மையான வழக்கம். இறைவழிபாட்டை ஒருநாளும் இந்த நாடு கைவிடாது. சான்றோர், செல்வர்கள், வேளாண்மை இம்மூன்றுமே நாட்டிற்குச் சிறப்பு கொடுப்பவை. இவை குன்றாமல் பார்த்துக்கொள்ளவேண்டிய கடமை மக்களுடையது"

என்றெல்லாம் தமக்கேயுரிய சொல்லாற்றலால் பேசி, அனைவரையும் தமிழின்பக்கடலில் திளைக்கச்செய்தார்கள். பிறகு வாகீசகலாநிதி, வித்துவான், திரு. கி. வா. ஜகந்நாதன் M.A. அவர்கள் (கலைமகள் ஆசிரியர்) பேசுகையில்,

"தண்டமிழ் நாட்டின் இயற்கை வழிபாடு ஹரி வழிபாடும், ஹரன் வழிபாடுமே. சங்க நூல்களில் இது பரக்கக் காணப்படுகின்றன. தொல்காப்பியத்தில் இதன் மரபு நன்கு புலப்படுகிறது. வாழ்க்கைக்கு முதற்பொருள்—உயிருக்கு முதற்பொருள் ஆண்டவனை முன்னே நிறுத்துவதுதான். முருகன், காளி, திருமால், வருணன், இந்திரன் ஆகிய ஐந்து தெய்வங்களை ஆதித்தமிழர் சிறப்பாக வணங்கிவந்தனர். தெய்வ உணர்ச்சியையும் ஆத்மீகப் பற்றையும் மக்களுக்கு ஊட்டும்பொருட்டு ஆழ்வாராதிகளையும், நாயன்மார்களையும் ஆண்டவன் அனுப்பினான். ஞானசம்பந்தரின் ஞானமும், அனுபவமும் ஒன்றுதிரண்டு

தெய்வத் தேவாரமாக உருவெடுத்தது. தேவாரம் சம்பந்தரின் ஞானப்பனுவலாக எழுந்தது''

என்று குறிப்பிட்டு இனிய தமிழில் பேசியதோடு முதல் திருமுறையின் முதற்பதிகத்திலுள்ள அருமையான கருத்துக்களை நன்கு விளக்கினார்கள்,

பிறகு, திரு. **சிவகுமாரன்** அவர்கள் 'சுந்தரமூர்த்திசுவாமிகளாலேயே அடியார்கள்வரலாறு நாட்டிற்கு நன்குவிளங்கின. உண்மைஞானத்தைப் பரப்பியவர்கள் சுந்தரமூர்த்திசுவாமிகளே. பரவைநாச்சியார் சமதர்மத்தை அக்காலத்திலேயே பரப்பினவர். மக்கள் அனைவரும் சீலத்துடனும் அன்புடனும் நடக்கவேண்டும் என்பதையே அவர்கள் அன்று காட்டினார்கள். நாம் மேற்கொள்ளும் இல்லறமெல்லாம் இறைவனுடைய திருவடிகளைச் சேருகின்றவழியிலே இயங்கவேண்டும்' என்று வற்புறுத்திப்பேசினார்.

முடிவுரையாகத் தலைவரவர்கள் 'தேவார திருவாசகங்களை இசையுடன் பாடவேண்டும்; செழுந்தமிழை – தெய்வத் தமிழை இலக்கியத் தமிழுடன் குழைத்து நுகரும் காலந்தான் தமிழ் சீர்படுங்காலம்' என்று குறிப்பிட்டுப் பேசினார்கள்.

வித்துவான், ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது.

1—10—53

நான்காம்நாள் மாலை திருமுறைவிழா மாம்பலம் சிவ விஷ்ணு ஆலயத்தில் தொடங்கியது. பல அன்பர்கள் பகல் 3½மணிக்கே வந்து குவிந்துவிட்டார்கள். யானையின்மேல் திருமுறை எழுந்தருளியது. ஆதீனம் தேவஸ்தானங்களைச் சேர்ந்த ஓதுவாமூர்த்திகளும், வெளியூர் ஓதுவாமூர்த்திகளும், ஆதீனத் தேவஸ்தானப் பாடசாலை மாணவ மாணவிகளும் அழகாகத் திருமுறைப்பாராயணஞ்செய்தார்கள். எல்லோரும் கானமிர்தசாகரத்தில் மூழ்கிக் களித்து மகிழ்ந்தனர். யானை அசைந்துநடந்தது; பண் அசைந்துவந்தது. அரைமைல் கடக்க

5?6

இரண்டுமணிநேரமாயிற்று. மகாநாட்டுப்பந்தலை அடைந்ததும் திருமுறைக்கு விசேஷ மரியாதைகளுடன் தீபாராதனை நடத்திவைக்கப்பெற்றது. மேடைமீது உயர்ந்த ஆசனத்தில் திருமுறை அலங்கரிக்கப்பட்டிருந்தது.

திருப்புகழ் மணி ஸ்ரீ டி. எம். கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் தலைமை ஏற்றுப் பேசத்தொடங்கினார்கள். அப்பேச்சு,

'இன்று நாடு சுயராஜ்யம் அடைந்துவிட்டதாயினும், நாமே நம்மை ஆண்டுகொள்ளும் தகைமை பெற்றுவிட்டபோதிலும், மக்களுக்கு நன்மைகள் பல புரிந்து, அவர்களுடைய வாழ்க்கை சீர்பட உருவான வேலையைத் தொடங்க வழியில்லாமலிருக்கிறது. "நான், எனது" என்ற அகம்பாவமும் ஆணவமும் தொலைந்து, ஜீவராசிகளிடம் அன்புகாட்ட முற்படவேண்டும். ஆண்டவன் அனுக்கிரஹத்தாலன்றி ஆணவத்தை அழிக்க முடியாது. மனதில் ஆண்டவனைப்பற்றினால் மற்றெல்லாப் பற்றுகளும் தாமே அறுந்துவிடும். இம் முயற்சியில் மக்களுக்கு உதவியாக இருக்க இங்கு சமயப்பிரசார நிலையம் ஒன்றை தருமபுர ஆதீனகர்த்தர் ஸ்தாபித்திருப்பது பெரிதும் போற்றத் தக்கது'

என்று குறிப்பிட்டார்கள்.

அடுத்தபடி பேசிய ஸ்ரீமதி டி. ராஜேஸ்வரியம்மையார் திருவாசகத்தின் மேன்மையை விளக்குகையில் ஐரோப்பியரான ரெவரண்ட்போப் துரை திருவாசகத்தின் அருமையைப்பாராட்டியிருக்கின்றார். அதைப்படிக்கையில் அவருக்கு எலும்பும் நெக்குருகிற்று என்று அவரே குறிப்பிட்டிருக்கிறாரென்றுரைத்தார்.

மூன்றாவதாகப்பேசிய ஸ்ரீ கே. பாலசுப்பிரமணிய ஐயர் M. L. C, அவர்கள்.

'நம் முன்னேற்றத்திற்காகப் பெருமுயற்சி செய்கிறோம். எதற்காக? சமூகம் நல்ல நிலைமையை அடைய; மக்கள் உயர் வாழ்வெய்த; இதை எந்த முறையில் செய்யவேண்டும்? சரியான வழி எது? இதைத்தான் தெரிவிக்கின்றன தேவாரமும் திருவாசகமும். அன்புவழிதான் சமூகம் உய்ய சரியான வழி

யென்று சமய நூல்களெல்லாம் - முக்கியமாகத் திருமுறைகள் சொல்லுகின்றன. அன்புக்கு விரோதமான வழி நாட்டிற்குக் கேட்டையே உண்டுபண்ணும்; திருமூலர் தத்துவமும் இதுவே 'அன்பே சிவம்' என்றார் அந்தத்திருமூலர்.

முன்னேற்றம் என்று சிலர் சொல்லிக்கொண்டு மற்றவர்களை வெளியேற்றம் பண்ணுகிறார்கள். கடவுளிடத்திலிருந்து மக்களைப் பிரிக்கமுடியாது. அன்பு வெள்ளப்பெருக்கு எடுத்து கடவுள் உருவமாக வேண்டும். எதற்கெல்லாமோ கோஷங்கள் கிளம்பும் இக்காலத்தில் அறுபகைகளும் (காமக்குரோதாதிகள்) மடிக "அறுபகை ஒழிக" என்ற கோஷம் இக்காலத்தில் எங்கும் ஓங்குமானால் மக்கள் உயர்வு பெறுவர்; நாடும் உய்வடையும்'

என்றெல்லாம் பேசினார்கள். கடைசியாக ஆதீனத் தமிழ்ப்புலவர், சென்னை, வித்வான், திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள் திருமுறை ஓதுதலே மக்கள் நலம்பெறும் வழி என்பதை விளக்கிச் சொற்பொழிவாற்றினார்கள்.

தலைவர் பகவந் நாமத்தைப் பஜிப்பதின் அவசியத்தை விளக்கமாகச் சொல்லித் தமது முடிவுரையை நிறைவேற்றிக் கொண்ட பிறகு, முறையாகப் பன்னிரு திருமுறைகளும் ஓதப்பட்டன. வித்துவான், ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அனைவர்க்கும் நன்றிதெரிவித்துக் கொண்டார்கள்.

வாழ்த்துச் செய்திகள்:

மதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம்,
குன்றக்குடி ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம்
திருப்பனந்தாள்,
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்,
குடந்தை ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள்,
யோகி சுவாமி சுத்தானந்தபாரதி,
சுவாமி ஸத்யானந்த சரஸ்வதி ரெய்ச்சூர்.
இந்திய உபஜனாதிபதி டாக்டர் ஸ்ரீ S. ராதாகிருஷ்ணன்,
சென்னை கவர்னர் ஸ்ரீ பிரகாசா
விந்திய பிரதேச கவர்னர் கனம். K. சந்தானம்

கனம் ஸ்ரீமதி மரகதம் சந்திரசேகர்,
கனம் ஸ்ரீ O. V. அழகேசன்
கனம் ஸ்ரீ M. A. மாணிக்கவேலு நாயக்கர்
கனம் உதவி சுகாதார மந்திரி, டில்லி,
சிப் ஜஸ்டிஸ் ஸ்ரீ பதஞ்சலி சாஸ்திரிகள்
ஸர் C. P. இராமசாமி ஐயர்
புதுக்கோட்டை மகாராஜா,
ஸ்ரீ கரு. முத்து. தியாகராச செட்டியார். மதுரை
ஸ்ரீ P. A. C. இராமசாமி ராஜா, ராசபாளையம்
ஸ்ரீ C. இராமநாத முதலியார், சீகாழி
ஸ்ரீ K. S. ராமசாமி சாஸ்திரிகள், சென்னை
ஸ்ரீ M. K. சண்முகம், M. A., L. T., சென்னை
ஸ்ரீ V. இரத்தின முதலியார், வேலூர்
திரு. N. அண்ணாமலை M. L. C. திருவண்ணாமலை
ஸர் P. T. இராஜன், மதுரை
ஸ்ரீ அ வேதரத்னம்பிள்ளை, வேதாரண்யம்
ஸ்ரீ R. கந்தசாமி மூப்பனார், குடந்தை
ஸ்ரீ T. S. சாமிநாத உடையார். குடந்தை
ஸ்ரீ K. K. மேனன், மதுரை
இராமநாதபுரம் தாயுமானவர் சன்மார்க்க சங்கம்
டில்லித் தமிழ்ச் சங்கம்
வாலாஜாபாத் இந்துமத பாடசாலை
மாயூரம் கூறைநாடு ஹைஸ்கூல்
சென்னை ஆரோக்கிய ஆஸ்ரமம்
,, சித்தி விநாயகர் ஆலய மன்றம்
ஸ்ரீ M. R. ஜம்புநாதன், பாம்பே
ஸ்ரீ K. ராஜா ஐயர், சென்னை
ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார்
ஸ்ரீ A. சீனுவாசராகவன், V. O. C. காலேஜ் தூத்துக்குடி
ஸ்ரீ சுந்தரேசபட்டர், மதுரை
ஸ்ரீ ஆராவமுத ஐயங்கார், மாயூரம்
ஸ்ரீ மரகத சுப்பிரமணிய பிள்ளை, அம்பாசமுத்திரம்
ஸ்ரீ வேங்கடாசலம் பிள்ளை, மாயூரம்
ஸ்ரீ V. சந்தானம், G. S. ஹிந்து ஹைஸ்கூல் ஸ்ரீவில்லிபுத்தூர்
ஸ்ரீ M. C. டேனியல், குடந்தை
ஸ்ரீ G. K, லக்ஷ்மண ஐயர், சிதம்பரம்
ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான், திருவாரூர்

வித்துவான் திரு. வை. மு. சண்முக தேசிகர், நாகை
ஸ்ரீ A. S. ரங்கநாதாசாரி, தஞ்சை
ஸ்ரீ சுப்பையா முதலியார் நீடாமங்கலம்
ஸ்ரீ N. ரங்கசாமி ஐயர் B. A., L. T., பொறையார்
ஸ்ரீ K. C. தியாகராஜன், திருச்சி
ஸ்ரீ C. K. சுப்பிரமணிய முதலியார், கோவை
ஸ்ரீ காளியாகுடி சீனுவாசய்யர், மாயூரம்
ஸ்ரீ ஆரோக்கியசாமி பிள்ளை. குடந்தை
ஸ்ரீ சாமி ஐயங்கார், மாயூரம்
A. R. C. & ஸன்ஸ், மாயூரம்
ஸ்ரீ C. R. பட்டாபிராமன், சென்னை
ஸ்ரீ T. M. ராமசாமிக்கவுண்டர் M. A., திருச்சி
ஸ்ரீ புலவர் மயிலை, சிவ. முத்து, சென்னை
ஸ்ரீ S. R. சர்மா. சென்னை
ஸ்ரீ G. வீரப்பபிள்ளை, பொறையார்
ஸ்ரீ சோமசுந்தரம் பிள்ளை. மாயூரம்
ஸ்ரீ V. நடராசன், சென்னை
ஸ்ரீ C. பிருந்தாதேவி, புதுக்கோட்டை
பாலு பிரதர்ஸ், சென்னை
ஸ்ரீ S. கணபதி முதலியார் M. A., L. T., நெல்லை
Consul J. Alfred Lafreniere.

முதலிய பலபெருமக்களிடமிருந்தும் பலசங்கங்களிலிருந்தும் வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன.

நன்றியுரை:

இந்தவிழா இத்துணைச் சிறப்பாக நடைபெற பெருங்கருணை புரிந்த எல்லாம்வல்ல சொக்கலிங்கப்பெருமான் திருவருளுக்கும், குருஞானசம்பந்தப்பெருமான் குருவருளுக்கும் எங்கள் வணக்கம் உரியதாகுக.

இந்த விழாவைத் தொடங்கிச் சிறப்பித்த சென்னை மாகாண முதலமைச்சர் கனம் ஸ்ரீ இராஜாஜி அவர்கட்கும், தேவாலய மந்திரி கனம் ஸ்ரீ வேங்கடசாமி நாயுடு அவர்கட்கும். சொற்பொழிவாற்றிச் சிறப்பித்த அறிஞர் பெருமக்கள் அனைவர்க்கும் எமது நன்றி.

விழாவில் பெரும்பங்குகொண்டு செய்திகளை அவ்வப்போது உலகிற்கு உபகரித்த செய்தியாளர்கட்கும், வாழ்த்துச் செய்திகள் அனுப்பிக் கௌரவித்த அன்பர்களுக்கும் மனமார்ந்த நன்றி.

D 80.

'ஞான தீபஸ்தம்பம்'

பல நூற்றுண்டுகளுக்கு முன்னுல் தெய்வத் தமிழ் நாட்டில் தெய்வ நம்பிக்கை குலையத்தொடங்கி வாழ்க்கை நெறியும் சீர்குலைய ஆரம்பித்தது. நாஸ்திகத்தின் நச்சுப்பிடி இறுக ஆரம்பித்தது. அப்போது தெய்வீகம் தழைக்க, சைவ சமயாசாரியர்கள் அவதாரம் செய்தார்கள். சைவத்தொண்டும் தமிழ்த் தொண்டும் செய்து தாழ்ந்த தமிழகத்திற்கு ஏற்றம் அளித்தார்கள்,

அதே மாதிரியான நிலைமை இப்போது மீண்டும் தோன்றியிருக்கிறது. பகுத்தறிவு, பொது உடைமை என்கிற கவர்ச்சிகரமான பெயர்களில் நாஸ்தீகம் மீண்டும் தலைதூக்கியிருக்கிறது. விநாயக விக்ரக உடைப்புபோன்ற துஷ்கிருஷ்த்யங்கள் தலைகாட்டத் தொடங்கியுள்ளன.

சமயப் பிரசாரம் என்று சொல்லும்போது யாருக்குமே தருமபுர ஆதீனத்தின் ஞாபகம்தான் வரும். ஒன்றல்ல, இரண்டல்ல, இருபத்தேழு ஆலயங்களைத் திறமையாக நிர்வகித்து வரும் இந்த ஆதீனத்தார் கல்வித் துறையிலும் அளவிடற்கரிய சேவைசெய்து வருகின்றனர். தேவாரப் பாடசாலை என்ன, தமிழ்க் கல்லூரி என்ன, வடமொழிக் கல்லூரி என்ன, இசைக் கல்லூரி என்ன, இப்படி எத்தனையோ கல்வி நிலையங்களை ஏற்படுத்தி நடத்திவருவது போதாதென்று சமூகத்தொண்டுகள் பலவும் செய்து வருகின்றனர்.

இந்த ஆதீனத்தின் இருபத்தைந்தாவது மகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நிர்வாகத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட சீரிய தொண்டுகளில் தலைசிறந்ததான ஒன்று சமீபத்தில் சென்னையில் ராஜாஜியால் தொடங்கி வைக்கப்பட்டது.

தியாகராயநகரில் உஸ்மான் ரோடில் சமயப் பிரசார நிலையம் ஒன்றைத் தருமபுர ஆதீனத்தார் ஆரம்பித்துள்ளார்கள். தலைநகரில் தெய்வப் பிரசாரத்தை நன்கு நடத்துவதற்காக நிறுவப்பட்டுள்ள இந்த நிலையம், நடுக்கடலில் வழி தவறிய மாலுமிக்குக் கரைகாட்டி கைகொடுத்து உதவும் கலங்கரை விளக்கமாக—ஞான ஒளிகாட்டும் தீபஸ்தம்பமாக விளங்க வேண்டும் என்பது நமது பிரார்த்தனை.

—தினமணிக்கதிர், 11—10—53.

581

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் யாத்திரை

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் சமயம் வாய்த்தபோதெல்லாம் பாடல்பெற்ற ஸ்தலங்களை விதிப்படி தரிசித்து வருகிறார்கள் என்பது நேயர்கள் அறிந்ததே. 15-9-53 அன்று திருவொற்றியூருக்கு ஸ்ரீ மாணிக்கத்தியாகரை வழிபட எழுந்தருளினார்கள் அங்கு பெருமானே நெய்யாடிப் பலநாள் கழிந்தமையின் நீறுபூத்த மேனியராகக் காட்சி அளித்தார். மகாசந்நிதானம் அவர்கள் பெருமானைத் தரிசித்து நீலோற்பலாம்பாளையும் வழிபட்டு வலமாக மகிழடிக்கு வந்தார்கள். வந்தவுடன், அடியார் கட்டளைப்படி ஆண்டவன் வீற்றிருந்த இடம் இந்த மகிழடியல்லவா! பாசமகன்ற பரவை கேள்வராகிய சுந்தரர்பெருமான் சங்கிலியால் தொடக்குண்ட இடம் இது அல்லவா! சபதம் தவறியதற்காகப் பழியதனைப் பாராதே படலத்தால் கண்ணை மறைப்பித்து, தோழமையைவிட்டு இறைமையைக் காட்டிக்கொண்ட இடம் இது அல்லவா! என்று எண்ணி எண்ணி, சுந்தரர் தேவாரத்தைச் சொல்லிச் சொல்லி வணங்கினார்கள்.

16—9—53 விடியற்காலை திருவேங்கடநாதனைச் சேவிக்க விரும்பித் திருப்பதிக்கு எழுந்தருளினார்கள். அங்கே திருமலை திருப்பதி தேவஸ்தானக் கமிட்டித் தலைவரும், சைவப்பிரமுகரும் பரம்பரைச் செல்வரும், அடக்கமே வடிவாய் அன்பினாலே எல்லாரையும் வசப்படுத்தும் பெருமை யுடையவருமாகிய ஸ்ரீமான் தியாகராஜ முதலியார் அவர்கள், கமிஷனர் அண்ணா ராவ் உள்ளிட்ட தேவஸ்தான நிர்வாகிகளுடன் எதிர்வந்து வரவேற்றார்கள். மகாசந்நிதானம் அவர்கள் விருந்தினர் விடுதிக்கு எழுந்தருளி, திருமஞ்சனமாதிகளை முடித்துக்கொண்டு, உச்சிக்கால வழிபாட்டை நிறைவேற்றிக்கொண்டார்கள்.

மாலை ஐந்துமணி. திருப்பதியிலிருந்தபடியே, அன்பின் எல்லையை அகில உலகிற்கும் அறிவித்த ஸ்ரீ காளத்திநாதரையும் ஞானப் பூங்கோதையையும், கண்ணப்பர் நீராடிப் பூக்கொய்து வாயில் திருமஞ்சனமெடுத்த பொன்முகலி யாற்றையும் தரிசிக்க வேண்டும் என்று திருவுள்ளங் கொண்டார்கள். அப்படியே

அங்கு எழுந்தருளியபோது தேவஸ்தான நிர்வாகிகளும், பிரமுகர்களும் ஸ்ரீ-ல,ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களை வரவேற்று கோயில் மரியாதையுடன் ஒவ்வொரு சந்நிதிக்கும் அழைத்துச் சென்றார்கள்.

பேரொளிப் பிழம்பாகிய காளத்தி நாதரைக் கண்டதும், மகாசந்நிதானம் அவர்கள் "காளத்தியான் அவன் என்கண்ணுளானே" என்ற அருள் மொழியை அடிக்கடிச் சொல்லிக் கொண்டே வந்தார்கள். இவ்வாறு காளத்தி தரிசனம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

திருப்பதிக்கு மீண்டும் இரவு 10-மணியளவில் எழுந்தருளியானார்கள். திருவேங்கடநாதன் பெரிய திருவடிமேல் எழுந்தருளும் சிறந்த திருநாள் ஆதலால் ஜனசமுத்திரம் அதிகம். எங்கும் பாகவதபிரவசனம், திவ்யபிரபந்தபாராயணம், பஜனை முழக்கம் இவைகளின் நடுவில் பெருமாள் கருடசேவைசாதித்தார். அடுத்த நாள் விடியல் 4-மணிக்கு சுப்ரபாதம், இந்தத் தரிசனம் எல்லார் மனத்தையுங் கரைக்கக்கூடிய நிலையில் பெருமானைத் துயிலுணர்த்திய நிலையாக இருந்தது. அது முதல் காலசந்திவரை தரிசனம் முடித்துக்கொண்டு திரும்பவும் சென்னைக்குப் பயணமானார்கள்.

17—9—53ல் வெள்ளிக்கிழமை மாலை 6-மணிக்கு மைசூரையடைந்தார்கள். அங்குச் சாமுண்டீஸ்வரிஆலயத்திற்குச்சென்று வழிபட்டார்கள். சாமுண்டீஸ்வரி கண்கண்ட தெய்வமாகக் காட்சிவழங்கும் - கண்ணைப்பிணித்துக் கருத்தைக் கவரும் தெய்வமல்லவா? அதனை வழிபட்டார்கள். மலைமேலுள்ள அரண்மனையையும் பார்வையிட்டார்கள். பின்னர் விடியலில் கண்ணம்பாடியணை, காவிரியம்மன், பிருந்தாவனம் எல்லாவற்றையும் கண்டு களித்தார்கள். காவிரியம்மன் திருக்கரத்தின் வழியாகக் காவிரிசுரப்பதைக் கவனியுங்கள்.

சீரங்கப்பட்டிணம் வழியாகப் போகும்போது காவிரி மேற்குநோக்கிப் பிரவாகிக்கும் இடத்தில் தீர்த்த விசேஷமாதலின் அதில் திருமஞ்சனம் செய்தருளினார்கள். 18—9—53 அன்று இரவு தருமைக்கு எழுந்தருளியானார்கள்.

583

திருப்பதி யாத்திரையின்போது வடபாதிமங்கலம் பெருநிலக்கிழார் சைவப் பெருமானுர் திரு. V. S. தியாகராஜ முதலியார் அவர்கள் மகாசந்நிதானம் அவர்களை வரவேற்று எல்லாச் சௌகரியங்களும் செய்வித்தது மிகமிகப் பாராட்டத் தக்கது. அவர்களுடைய குருபக்தியும் சிரத்தையும் கொண்டாடத்தக்கன.

அப்படியே, அவர்கள் நண்பரும், திருப்பதி தேவஸ்தான கமிட்டி மெம்பருமான திரு. வீரப்பா அவர்கள் மைசூர் யாத்திரைக்கு வேண்டிய வசதிகள் அனைத்தையும் கவனித்தது மிகவும் குறிப்பிடத்தக்க விஷயம்.

திருப்பதிப் பெருமானுக்கு வெள்ளிக்கிழமைதோறும் திருமஞ்சன விசேஷமாதலின் சென்னை சமயப்பிரசார நிலையத் திறப்புவிழா முடிந்ததும் அதற்குவேண்டிய முன்னேற்பாடுகள் செய்விக்கப்பெற்றன. சந்நிதானம் அவர்கள் 250 பட்டணம் படி பால் வாங்க ஏற்பாடுசெய்திருந்தார்கள், பெருமானுக்குப் பால், தேன், சந்தனம், தீர்த்தம் இவைகள் மட்டும்தான் திருமஞ்சனம் செய்வது வழக்கம். அன்று பகல் 3 மணி வரைதான் பெருமானுடைய திருமேனியழகை ஆபரண மறைப்பில்லாமல் கண்டு களிக்கலாம். 2–10–53 வெள்ளி அன்று பகல் பதினெரு மணி யளவில் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருமலைக்கு வந்து சேர்ந்தார்கள். வழக்கம்போல ஸ்ரீமான் V. S. தியாகராஜ முதலியார் அவர்கள் வரவேற்று, திருமஞ்சன தரிசனம் செய்வித்தார்கள். குறித்தபடி பாலபிஷேகம் நடைபெற்றது. தரிசனம் முடிந்ததும் புறப்பட்டு, சனியிரவே தருமைக்கு எழுந்தருளியானுர்கள்.

நேரு விஜயம் இருந்துங்கூட—தாம் ஒரு அகில இந்திய காங்கிரஸ் உறுப்பினர் பதவியிலிருந்துங்கூட ஆந்திர பிரிவினை நாள் வைபவம் இருந்தும்—வைதீக மார்க்கத்திலுள்ள சிரத்தையாலும் குருபக்தியாலும் ஸ்ரீமான் V. S. தியாகராஜ முதலியார் அவர்கள் தமது தம்பி ஸ்ரீமான் ராதாகிருஷ்ண முதலியாருடன் இருந்து தரிசனஞ்செய்வித்தது பாராட்டற்குரிய நிகழ்ச்சி.

தருமபுரத்தில் கலைமகள் விழா

தருமபுர ஆதீனக் கல்வி நிலையங்களின் சார்பில் கலைமகள் விழா 8—10—53-ல் தொடங்கி நடைபெற்று வருகிறது. ஒவ்வொருநாளும் ஒவ்வொரு கலையைப்பற்றிச் சொற்பொழிவு நிகழ்கிறது. ஆதீனக் கல்வி நிலைப மாணவர்கள் தமிழிலும், சம்ஸ்கிருதத்திலுமாகப் பக்திபெருக்கும் நாடகங்கள் ஒன்றொன்று நடிக்கிறார்கள்.

முதல்நாள் நிகழ்ச்சி:

மாலை 5½ மணி. சென்னை அரசாங்க மதுவிலக்கு மந்திரி கனம் ஸ்ரீ V. C. பழநிச்சாமி கவுண்டர் அவர்கள் தருமைக்கு வந்து சேர்ந்தார்கள். ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்க நிலைப் பள்ளியில் கதர்மாலை சூட்டி வரவேற்கப் பட்டது. மாணவிகள் கும்மி கோலாட்டம் முதலியன செய்து காட்டினார்கள். மந்திரி அவர்கள் பள்ளியைப் பார்வையிட்டு பதிவுப் புத்தகத்தில் பாராட்டுரையை எழுதினார்கள். தேவார ஆகம பாடசாலைகளையும், கல்லூரிகளையும், இசை வகுப்பு களையும் பார்வையிட்டு மகிழ்ந்தார்கள். ஆதீன மடாலய வடக்குத் திருவாயிலாகிய அப்பர் நிலையத்திற்கு வந்ததும் திருவாரூர் இராஜாங்கக் கட்டளை ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் மாலைசூட்டி வரவேற்றார்கள். அடுத்து ஆதீன நூல் நிலையம், சொக்கநாதர் சந்நிதி ஆகிய எல்லா வற்றையும் ஒவ்வொன்றாகப் பார்வையிட்டு, பிறகு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களையும் தரிசித்தார்கள்;

மணி 6½. விழா தொடக்கம், பாடசாலை மாணவர்கள் கடவுள் வாழ்த்துப் பாடினார்கள். வித்துவான், C. சிங்கார வேலனால் கல்வி நிலையங்களின் சார்பில் வரவேற்பிதழ் வாசித் தளிக்கப்பெற்றது. வித்துவான், ச. தண்டபாணி தேசிகர் கலைமகள் விழாத் தத்துவங்களைப்பற்றிப் பேசினார். பிறகு தலைவரவர்கள்,

585

"சுவாமிகள் அவர்களே! பெரியோர்களே!

"இந்தக் கலைமகள் விழாவைத் தொடங்கி வைக்கக்கூடிய பாக்கியத்தை எனக்கு அளித்ததற்குப் பெருமகிழ்ச்சி. நம் நாட்டிலே எல்லாவற்றையும் தெய்வ சம்பந்தத்தோடு தெய்வத்தின் கருணையால் நடத்தி, தெய்வாநுக்கிரகத்தாலே வாழ்கிறோம். இந்த ஆதீனம் தெய்வ நம்பிக்கைக்காகவும், மொழிக்காகவும், சிரத்தையுடன் செய்து வரும் சேவைகளைப் பார்த்தால் மிக விரிவாகவும் அற்புதமாகவும் இருக்கிறது. ஒவ்வொரு கல்வி நிலையங்களும் மிக்க சிரத்தையுடன் தங்கள் கடமைகளைச் செய்கின்றன. இந்தக் காலத்திலே குழந்தைகள் உள்ளத்திலே தெய்வ நம்பிக்கை என்கிற விதையை விதைக்க வேண்டியதுதான். குழந்தைகள் உள்ளம் எருவும் தண்ணீரும் வளமாக வாய்க்கப்பெற்ற வயல். அதில் போடப்பட்ட விதைகள் ஒன்று பத்தாகி—ஆயிரமாகி நல்ல பலன்களைக் கொடுக்கும். அதனாலேயே இந்த ஆதீனம் தெய்வச் சூழலில் இத்தனை கல்வி நிலையங்களை ஸ்தாபித்திருக்கிறது. இங்கே வாசிக்கும் குழந்தைகள் பிற்காலத்தில் நல்ல தெய்வ நம்பிக்கையும் ஒழுக்கமும் உடையவர்களாக விளங்குவார்கள். இது தென்னிந்திய சமுதாய வளர்ச்சிக்குப் பெரிய வழியல்லவா! இக்கலை நிலையமாகிற புத்தகசாலை தென்னிந்தியாவிலுள்ள மிகச் சிறந்தவைகளுள் ஒன்று. இப்படிப்பட்ட ஒரு புத்தகசாலை ஆராய்ச்சிக்கு மிகப் பெரிதும் பயன் படும்"

என்று ஆதீனப் பணிகள் பலவற்றையும் பாராட்டிப் பேசி விழாவைத் தொடங்கி வைத்தார்கள்.

மாயூரம் ரெவினியூ கோர்ட் ஆபீஸர் திரு. V. K. C. **நடராஜன் M. A.,** அவர்கள் காவியக்கலையைப் பற்றி மிக அருமையானதோர் சொற்பொழிவு நிகழ்த்துகையில், தமிழ்க் காவியங்கள் பலவற்றையும் குறிப்பிட்டு, அவைகளிலிருக்கும் காவியப்பண்புகளை எடுத்துக்காட்டி, ஆங்கிலக் கவிஞர்களின் போக்கையும் ஒப்பிட்டுச்சொல்லி, கம்ப ராமாயணத்தில் நாட்டுப் படலம் நகரப்படலம் நீங்கலாக ஏனையவைகளில் காவியப்பண்புகள் இருக்கிறது கம்பனே சிறந்த காவியக்கவி என்றெல்லாம் மிக அழகாக - விளக்கமாகப் பேசினார்கள்.

பிறகு மந்திரி அவர்கள் ஸ்ரீ துர்க்காதேவி வழிபாட்டை முடித்துக் கொண்டார்கள். கல்வி நிலையமாணவர்கள் நடித்த 'சண்பகமாறன்' நாடகத்திற்கும் விஜயமாகி, கண்டுகளித்து மாணவர்கள் நடிப்புத் திறமையையும் பாராட்டிப் பேசினார்கள். திரு. ச. தண்டபாணி தேசிகர் நன்றியுரைகூறக் கடவுள் வாழ்த்துடன் அன்றைய நிகழ்ச்சி முடிந்தது.

மறுநாள் காலை கனம் மந்திரி அவர்கள் திருக்கடவூர் வழிபாட்டுக்குச் சென்றார்கள். வழிபாடு முடிந்தது. தேவஸ்தான தேவாரவகுப்பு மாணவ மாணவிகள் பாடிய பாட்டுக்களைக் கேட்டு மகிழ்ந்தார்கள். தேவஸ்தானத்தில் காலை 5மணி முதல் 7 வரையிலும் மாலை 6 மணிமுதல் 9 வரையிலும் தேவார திருவாசக அபிராமி அந்தாதி ஸ்தோத்திரங்கள் ஒலி பரப்பப்படுவதைக்கண்டு வியந்து, 'எல்லாத் தலங்களிலும் இப்படி அமைப்பது ஜனங்களுக்குத் தெய்வசிந்தனையை மறவாமலிருக்கச்செய்யும் வழியாகும்.' என்று பாராட்டினார்கள். கோயில் மரியாதைகளெல்லாம் ஒழுங்காகநடைபெற்றது. பிறகு அங்கிருந்து மீண்டும் தருமைக்கு வந்து ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களைத் தரிசித்து அளவளாவி மகிழ்ந்தார்கள்.

9—10—53 வெள்ளி] [ஒப்பனைக் கலை

பேச்சு: வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள்

(தருமபுர ஆதீனம் பல்கலைக்கல்லூரித் துணைத்தலைவர்.)

நாடகம்: "மாறுவேடம்"

10—10—53 சனி] [ஓவியக் கலை

பேச்சு: வித்துவான் திரு. S.V. வரதராஜ ஐயங்கார் அவர்கள்

M.A., M.O.L.

(தமிழ் விரிவுரையாளர், ஜெயின் காலேஜ், சென்னை)

நாடகம்: "தடாதகை திருமணம்"

587

11—10—53 ஞாயிறு] [சிற்பக் கலை

பேச்சு :

திரு. T. M. பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள் M.A.,

(Personal Assistant to the Special officer, Tanjore Dt., Board)

நாடகம் : "தூதகடோற்கஜம்"

12—10—53 திங்கள்] [ஆடைக் கலை

பேச்சு :

புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியாரவர்கள்,

தமிழ்ப்பேராசிரியர், தருமபுர ஆதீனப் பல்கலைக்கல்லூரி.

நாடகம் : "நான்கு பண்டிதர்கள்"

13—10—53 செவ்வாய்] [நாட்டிய-நாடகக் கலை

பேச்சு : திரு. E. கிருஷ்ணஐயர் அவர்கள் B.A., B.L.,

(அட்வொகேட், சென்னை.)

நாடகம் : "திருக்குறளில் சிலகாட்சிகள்"

14—10—53 புதன்] [இசைக் கலை

பேச்சு : திரு. K. வாசுதேவசாஸ்திரிகள் அவர்கள் B.A,

(ஆராய்ச்சியாளர், தஞ்சை சரஸ்வதிமால் லைபரரி.)

நாடகம் : "மிருச்சகடிகம்"

15—10—53 வியாழன்] [இலக்கியக் கலை

பேச்சு : திரு. V. K. C. நடராசன் அவர்கள் M.A.,

(ரெவினியூகோர்ட் ஆபீஸர், மாயூரம்.)

நாடகம் : "குற்றாலக்குறவஞ்சி"

588

The Madras City Devasthanams' Orphanage

the opening function Speech by

Hon'ble Sri K. Venkataswami Naidu Garu

(Minister for Religious Endowments, Madras.)

18—9—53.

MAINTAINED OUT OF TEMPLE FUNDS.

The Scheme of Orphanages is not new to our Temple administration. We read in History that the Temple always gave shelter and food to the poor and helpless. Some children were bred up and taught in Temples. Sri Ranganada of Srirangam adopted Parasara Bhattar as his son and he was brought as such. Giving of food, medicine to all and education to children were part of Temple life. But were the fundamental principle underlying this charity has that they are God's children and should be brought up in devotion. Maheswara Pooja or Tadeyaradhana is feeding the Bhakthas.

DIVERSION OF TEMPLE FUNDS

Under the new Hindu Religious Endowment Act diversion of surplus funds of the temple is sanctioned by the Government for the following among other purposes:—

1. Propagation of Religious tenets
2. Establishment and maintenance of orphanages and Destitute Homes
3. Asylams for lepers
4. Promotion of study of Indian languages including Sanskrit
5. Promotion of Indian Arts and Architecture.

Under this provision a number of temples have applied for diversion of surplus funds for one or other of the above matters and the Department has readily sanctioned such diversion and encouraged the temple Trustees to use the money for such cultural and humanitarian purposes.

RENAISSANCE OF RELIGIOUS THOUGHT AND CULTURE

There is now a great Renaissance of Religious thought and culture. The trustees are taking greater interest in keeping the temples tidy and clean. They are renovating a number of temples with the help of public charity. It is a feature of temple life to-day that they arrange for Musical Recitation of Religious texts and arrange for teaching of the school children in evening classes and also broadcast them to the town or village through loud speakers. There is a feeling now that the beautiful sculptures, icons and works of Art should be carefully preserved. Formerly these sculptures were covered by thick layers of lime wash but they are removed by special chemicals and once again those works of art are exhibited. Museums of temple art and culture are established in various places in Tirupathi, Alagarcoil, Srirangam and other places. It is proposed to have some central museums at important centres. The Art gallery at Tanjore is the one of such museums. We are thankful to Mr. Palaniappan Collector and Chairman of Art Gallery Committee and other members for their lead. It is proposed to start another Museum at Kancheepuram.

CASE OF DESTITUTES

The case of the Destitute especially persons struck with leprosy is claiming our special attention. Tirupathi Devasthanam has a big leper Asylum and a poor home. Palani Devasthanam has just started a poor home. The beggar nuisance near the temples is a great problem for the Devotee. While he comes to the temple his peace of mind is disturbed by

these beggars most of whom do not deserve any consideration. But it must be possible for the temples to really provide for helpless people while the police will keep the place cleared of disturbing elements.

The problem of destitute children is a very pitiable one. The mother dies in the Hospital leaving a small baby. Who should look after the child ? Children are found abandoned in gutters, dustbins and road sides. What is to become of them ? Owing to extreme poverty parents do not know what to do with their numerous children. Some of their children are led into bad ways and turn out to be pickpockets, thieves and rowdies. Some unscrupulous people make use of them for evil deeds. The Government is tackling this problem in various ways. Vigilance Homes, Bala Mandir, Junior Certified Schools and Orphanages are tackling this problem in various ways. But still the problem is great and any amount of money and help rendered will be a great service to humanity and country.

ORPHANAGES RUN BY TEMPLES

Now coming to the subjects of Orphanages this subject is well received by the public and devotees in particular They are anxious that all those temples that can afford should maintain some children who will be brought up as real children of God. They will not be treated as beggars or Anadhas. They will be considered as sacred children of the soil who by some circumstances are not in a position to secure the necessary wherewithal in life but who under the shelter of Providence will grow to their full stature to fulfil great missions in life. They will not be abandoned after 18 years to their fate because they have nobody to put them on their feet. Their rehabliation will also be the concern of the institution. They will be put under great discipline and equipped to take their proper place in life. This is a great attempt which ths Hindu society has started on a large and concentrated scale.

591

WHAT OTHERS DO

The Christian and Muslim brotheren have led the way. In our country we have their example. How the fathers and nuns do the sacred duty and make first class citizens out of abandoned children. It is an object lesson to us all. Let the Hindu Society and temple be proud that we too have tackled these humanitarian and Religious problems befitting the need of the times.

PROGRESS OF WORK

There are now 9 orphanages including those in Madras.

1. Tirupathi
2. Vaidiswarancoil
3. Palani
4. Nachiarkoil
5. Madura
6. Tiruvarur
7. Annavaram
8. Kovur

& 9. Madras City (providing for nearly 300 children).

Arrangements for orphanages at (1) Srivilliputtur (2) Courtallam (3) Tiruchendur (4) Mangalore (5) Palghat (6) Coimbatore (7) Dwaraka Tirumalai (8) Ponnur and some other places are under way. In Madras and Simhachalam there are students free' hostels for College and High School students. The Madras City is already served by some orphanages but this is the first of its kind started by temple administration.

MADRAS CITY DEVASTHANAM ORPHANAGE

The Mylapore Temple has given very valuable lands under ideal surroundings. There is the river on one side

and the canal on the other side. There is plenty of land where children can do garden work. There is ample scope for expansion here. Trustees of Sri Kapaleeswarar Temple have taken the initiative in this matter. Daily prayer, study of sacred texts and manual work besides the learning of 3 R's will be chief features of this institution. Older children from Bala Mandir and children with Destitute certificates from the Collector of Madras will have first preference for admission.

OUR IDEAL

Most of the time the boys will be spending in training without their being conscious of it. Their life energy will be canalised into disciplined and fruitful directions. It will not be allowed to be dissipated but is helped to mould itself to higher power and purpose. Such of those that show interest and talent in art, crafts etc. will be given every facility to develop themselves in these directions. The entire life will bear the mould stamped upon it by the Religious atmosphere. The presence and example of good teachers who by their daily touch and silent guidance and help to each individual will be capital factors.

CONCLUSION

The Orphanage Scheme will aim at solving the problem of Destitute children in some measure. Thess children will be given all the facilities to grow up to their full stature They will be given that spiritual backward which is wanting in many a household and schools now-a-days.

கோசார பலன்

ஜோதிஷார்ணவம், பிரமஸ்ரீ. முத்துசோதிடர், திருவிடைமருதூர்

(விஜய-ஸ்ரீ ஐப்பசி-மீ 1-உ முதல் 30-உ முடிய)

(17—10—53 முதல் 15—11—53 முடிய)

1. மேஷம்: அசுவதி, பரணி, கார்த்திகை ¼.

அசுவதி கார்த்திகை நக்ஷத்திர பாதங்கள் பூர்ண சுபத்தையும் லாபத்தையும் தொழில் ஓங்குதலையும் மேலோர் நேசத்தையும் உத்யோக லாபத்தையும் தூரதேசப் பிரயாணத்தையும் சந்தோஷத்தையும் தரும். பரணி 1, 2, 3 பாதங்கள் சென்ற பாதம்போலவே நடப்பதோடு சத்துரு மூலமான ஆபத்தையும் தரும். துஷ்டஜன சேர்க்கையால் துர்ப்புத்தியும் நாஸ்தீகமும் அதிகமாகும். பெரியோர் சாபம் ஏற்பட்டுக் குலம் அழிவைக் காட்டும். கடவுளை உள்ளன்போடு வஞ்சகமில்லாமலும் அறம் பாவமில்லாமலும் வழிபட்டால் தப்பலாம். புதன் வியாழன் நலன் தரும்.

2. விருஷபம்: கார்த்திகை ¾, ரோஹிணி, மிருகசீரிஷம் ½.

கார்த்திகை மிருகசிரிஷம் இரண்டுக்கும் அதிகச்செலவுகளும் மனம் அடிக்கடி மாறுதல் அடைந்து சஞ்சல புத்தியும் வேலைக்காரன் தொல்லையும் வியாதி பீடையும் காரிய விக்னமும் ஈதி பாதைகளும் ஏற்படும். ரோஹிணியின் பலன் முற்பாதி நன்மையும் ஆரோக்கியமும் லாபமும் ஏற்படும். பிற்பாதி விபாதி பீடையும், மனோவிசாரமும் அதிக விரயமும் ஏற்படும். வெள்ளிக்கிழமை சுபவாரமாகும்-

3. மிதுனம்: மிருகசீரிஷம் ½, திருவாதிரை, புனர்பூசம் ¾.

மிருகசிரிஷம் பின்னரை ஜயத்தைத் தரும். எங்கும் புகழ் உண்டாகும் திருவாதிரை கஷ்டத்தில் சுகம் காட்டும். அதிக உழைப்பும் மனோவிசாரமும் இல்லறத் தொல்லையும் விடாது. புனர்பூசம் முக்காலும் துர்மந்திரிகள் சேர்க்கையாலும் அறங்

594

கார மமகாரத்தாலும் நாஸ்திகர் பழக்கத்தாலும் எதிர்கால அசுபத்தையே காட்டி எல்லாக் காரியங்களும் கெடும். வீண் அலைச்சல் மனஸ்தாபம் விவசாயநஷ்டம் கீர்த்திபங்கம் ஆரோக்கியக்குறைவு குடும்பத்தொல்லை இவைகள் உண்டாகும். புதன் சனி நலன்காட்டும்.

4. கடகம்: புனர்பூசம் ¼, பூசம், ஆயில்யம்.

ஆயில்ய நக்ஷத்திரபலன் மாதமத்தியில் ஏராளமான லாபம் கிடைக்கும். தொழில் ஓங்கும். நல்லோர் பெரியோர் ஆசி கிட்டும். ஐயமும் கீர்த்தியும் உண்டாகும். மற்ற இரு நக்ஷத்திர பலனும் பூரா சுபமிராது. மிசிரமாய் நடக்கும். பூசத்துக்குத் துர்ப்புத்தியும் திருட்டுபயமும் ஏற்படும். நாஸ்திகம் ஓங்கும், பெரியோர் சாபம் கிட்டும். மாதுவர்க்கம் குறையும். துர்வினியோகம் அதிகமாகும். சத்துருபாதைஅதிகப்படும். சனிக்கிழமை நலன்காட்டும்

5. ஸிம்மம்: மகம், பூரம், உத்திரம் ¼.

மகம் பூரம் சென்ற மாதம்போலவே நடக்கும். வித்யா விருத்தியும் தொழில் பழக்கமும் மேலோர் அன்பும் கிட்டும். உத்திரத்துக்கு முதல்பாதம் மிகுந்த யோகத்தைத்தந்து பெரிய கவலையைக் கொடுக்கும். திட்டுக்காத்தலும் சதா அசுபசமாசாரக் கேள்வியும் வந்துகொண்டிருக்கும். புதன் வியாழன் நலன்தரும்.

6. கன்னி: உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை ½.

உத்திரத்துக்கு ஜயபேரிகை அடிக்கும் லோக பூஜ்யத்துவம் உத்யோக மேன்மை கீர்த்திபத்திரம் கிடைத்தல் உல்லாசப் பிரயாணம் நூதன வஸ்திராபரணச்சேர்க்கை பந்துமித்திர சேர்க்கை முதலிய மங்களமுண்டாகும். ஹஸ்தத்துக்கு எடுத்ததெல்லாம் கைகூடும். தெய்வபலம் பிரகாசிக்கும். மஹாயஞ்ஞ பிரதிஷ்டா தானதர்ம பலன்கள் கிட்டும். தூரதேசத்திலிருந்து அழைப்புப் பத்திரம் வரும். சில பாபகர்ம வசத்தால் துஷ்ட சேர்க்கையும், மனமாறுதலும் மமகார அஹங்காரங்களும் காட்டும். ராஜாங்க மைத்திரமும், வெகுஜன சேர்க்கையும். சந்தோஷமும் சபாபூஜ்யத்வமும் தரும். வெள்ளியும் சனியும் சுபவாரமாகும்.

595

7. **துலாம்:** சித்திரை ½, சுவாதி, விசாகம் ¾.

சுவாதி நக்ஷத்திர பலன் பூரணஜயமும் அன்னிய ஸ்தல வாசமும் சபாபூஜ்யத்துவமும் விசேஷ தனலாபமும் நூதன வஸ்திராபரணச் சேர்க்கையும் ஆரோக்கியமும் சென்றவிட மெல்லாம் சிறப்பும் சுகபோக பாக்கியங்களும் நிதிதனநிதி லாபமும் ஏற்படும். வெள்ளியும் புதனும் சுபவாரமாகும். சித்திரை விசாகம் இரு நக்ஷத்திரபலனும் ரொம்ப கஷ்ட நஷ்டங்களை உண்டுபண்ணும், தெய்வபலம் இராது. கடவுள் காப்பாராக.

8. **விருச்சிகம்:** விசாகம் ¼, அனுஷம், கேட்டை.

கேட்டை பூரண சுபத்தையே தரும். மங்கள வார்த்தைகள் நடக்கும். நஷ்ட தனம் சேரும். பரீக்ஷையில் ஜயிப்பர். உத்யோகம் கிட்டும், விசாகம் பூரா அசுபமாகும். அனுஷம் முற்பாதியில் கஷ்டபலனும் பிற்பாதி லாபகரமும் ஏற்படும். பிரயாசையின் பேரில் சகல காரியங்களும் சாதிக்கலாம். புதன் சனி மங்களம் தரும்.

9. **தனுசு:** மூலம், பூராடம், உத்திராடம் ¼.

மூலம் பூராடம் இரு நக்ஷத்திரபலனும் ஜாஸ்தி தொல்லையைத்தரும். குடும்ப கலஹமுண்டாகும். நஷ்டம் காட்டும், வேலையாள் தொல்லையும் விவசாய நஷ்டமும் ஈதிபாதைகளும் ஏற்படும். அதிகச் செலவின்பேரில் முடிவில் சுபமுண்டாகும். வெள்ளி சுபவாரமாகும்.

10. **மகரம்:** உத்திராடம் ¾, திருவோணம், அவிட்டம் ½.

சிரவணத்துக்கு அசாத்தியமெல்லாம் சுலபமாகும். ஜீவனம் ஏற்படும். தூரப்பிரயாணம் சித்திக்கும். காரியம் வெற்றி யடையும். ஆரோக்கியமுண்டாகும். உத்திராடம் அவிட்டம் இரு நக்ஷத்திரபலனும் கஷ்டத்தோடும் தொல்லையோடும் மனக் கவலையோடும் ஓடிக்கொண்டிருக்கும். ஆரோக்கியமுண்டாகும். சத்துரு பாதை நீங்கும். சனி ஞாயிறு சுபம் தரும்.

11. **கும்பம்:** அவிட்டம் ½, சதயம், பூரட்டாதி ¾.

பூரட்டாதிக்கு ஆடை ஆபரண சேர்க்கையும் சுகபோகங்களும் சஞ்சார பலனும் ஆரோக்கியமும் ஏற்படும். மற்ற இரு நக்ஷத்திரங்களுக்கும் தொழில்லாபம், விவசாயலாபம், உத்யோக மேன்மை, பெரியோர் நேசம், தூரப்பிரயாணம் முதலியவைகள் உண்டாகும். வியாழன் வெள்ளி சுபம் தரும்.

12. **மீனம்:** பூரட்டாதி ¼, உத்திரட்டாதி, ரேவதி.

உத்திரட்டாதிக்குச் சஞ்சார சுகம், மேலோர் பெரியோர் நேசம், உத்யோகமேன்மை, நஷ்டதனபிராப்தி, மனோ உல்லாசம் இவை கிடைக்கும். பூரட்டாதிக்கும் ரேவதிக்கும் எத்தனையோ எதிர்பாராத காரியங்கள் எல்லாம் தெய்வபலத்தால் கைகூடும். தொழில் மேன்மையும் நஷ்டதன பிராப்தியும் ஏற்படும். இல்லறத்தில் சதா குரோதமும் மனக்கசப்பும் காட்டும். சிரமத்தோடு சந்தோஷமும் உதவிகளும் உண்டாகும். வியவஹாரம் ஜயிக்கும். சத்துரு சரணடைவன், ஆரோக்கியம் ஏற்படும், தொழில் ஓங்கும். புதன் வியாழன் சுபம்தரும்.

குறிப்பு: ஷை மாதம்முதலே துஷ்ட கோசாரங்கூட கெடுதல் அதிகமில்லாமல் நடக்கும், எங்கும் ஆஸ்தீகமும் தெய்வ சக்தியும் ஓங்கும். ஆனால் காமக்குரோதாதிகள் குறையாது. ஆகையால் சஜ்ஜனங்கள் அடிக்கடி தெய்வசிந்தனையை விடாமல் செய்து கொண்டிருந்தால் துஷ்டர்களும் திருந்தி நல்வழி அடைந்து உலகமே சுபிக்ஷமாய் நடக்கும்.

597

தருமபுர ஆதீன வெளியீடு.

திருஞானசம்பந்தர் தேவாரம்

முதல் திருமுறை

திருப்பனந்தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், குடந்தை ஸ்ரீமத். சங்கராசாரிய சுவாமிகள் அவர்கள் ஆகியோர்களின் மதிப்புரைகள் கொண்டது.

ஆதீனப்புலவர் ச. தண்டபாணி தேசிகர் எழுதிய பாடல்கள்தோறும் குறிப்புரையும், இத்திருமுறையில் வந்துள்ள தலங்களைப்பற்றிய புராணவரலாற்றோடு கூடிய கல்வெட்டு ஆராய்ச்சிக்குறிப்புக்களும் இதில் இடம்பெற்றுள்ளன. அற்புதச்செயல்களைக் காட்டும் படங்களும், கோயிற்படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

டிம்மி 1 x 8 சைஸ். பக்கங்கள் 768.

விலை விபரம்:

ராப்பர் பைண்டு: ... ரூ. 3—8—0
ரிஜிஸ்டர் தபாற்செலவுவகையரு ரூ. 1—5—0

காலிகோ பைண்டு: ... ரூ. 5—0—0
ரிஜிஸ்டர் தபாற்செலவு வகையரு ரூ. 1—8—0

கிடைக்குமிடம்:—

ஷராப்,
தருமபுர ஆதீனம்,
தருமபுரம், மாயூரம் P.O.
தஞ்சாவூர் ஜில்லா.

கந்தவேள் கழகத்தில் கலைமகள் விழா

திருப்பனந்தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரி ஸ்ரீ கந்தவேள் கழகத்தின் சார்பில் ஆண்டு தோறும் நடைபெற்றுவரும் கலைமகள்விழா இந்த ஆண்டும் 8-10-53 வியாழக்கிழமை தொடங்கி நடைபெற்றுவருகிறது. பதினெண்கீழ்க் கணக்கு நூல்களின் அருமை பெருமைகள் விளக்கும் சொற்பொழிவுகளாக நாடோறும் கீழ்க்காணுமாறு நிகழ்கின்றன.

8—10—53ல் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் ஜூனியர் ஸ்ரீமத். வித்துவான் மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமையில் S. D. கேசவன், IV u. c. 'ஐந்திணை ஐம்பதும் எழுபதும்' வீ. திருமால் III u. c. 'களவழி நாற்பது'. 9—10—53ல் வித்துவான், திரு. S. V. வரதராச ஐயங்கார் அவர்கள், M. A., M. O. L. (தமிழ் விரிவுரையாளர், ஜெயின் கல்லூரி, சென்னை) தலைமையில், இரா. கண்ணப்பா, IV u. c. 'திணைமாலை நூற்றைம்பது; திணைமொழியைம்பது' இரா. வேதையா, III u. c. 'ஏலாதி'. 10—10—53ல் உயர்திருவாளர், S. A. சுந்தரராஜன் அவர்கள் B. A., (R. D. O. Revenue Court, தஞ்சாவூர்) தலைமையில், க. ஜயராமன், IV u. c. 'நான்மணிக்கடிகை', இல. அண்ணாமலை, III u. c. 'இன்னாநாற்பது; இனியவை நாற்பது'. 11—10—53ல் வித்துவான், ஸ்ரீமத். மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் (கட்டளைவிசாரணை, ஸ்ரீ அருணசடேசுவரசுவாமி கோவில், திருப்பனந்தாள்) தலைமையில் கி. இராமசாமி, IV u. c. 'ஆசாரக்கோவை' மா. சுப்பிரமணியன், III u. c. 'கார்நாற்பது'. 12—10—53ல் வித்துவான், திரு. சி. துரைசாமி ஐயர் அவர்கள், (தலைவர், தமிழ்க்கல்லூரி, மயிலம்) தலைமையில் த. பழநிவேலு, IV u. c. 'சிறுபஞ்சமூலம்' ம. மணி, II u. c. 'முதுமொழிக்காஞ்சி'. 13—10—53ல் வித்துவான், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள், (தமிழ்ப்பேராசிரியர், தருமையாதீனக்கல்லூரி, தருமபுரம்) தலைமையில், அ. சாமிநாதன், IV u. c. 'இன்னிலை—கைந்நிலை' மொ. பூ. திருமூர்த்தி, I u. c. 'திரிகடுகம்'. 14—10—53ல் வித்துவான், ஸ்ரீமத். மௌன. சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள், (மௌனமடம், திருச்சி) தலைமையில், சா. சதாசிவம், IV u. c. 'நாலடியார்' ஆ. இராமசாமி, II u. c. 'பழமொழி'. 15—10—53ல் உயர்திரு. T. M. பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள், M. A., (Personal Assistant to the Special Officer, Tanjore Dt. Board, தஞ்சாவூர்) தலைமையில், அ. பாலசுப்பிரமணியன், IV u. c. ஆ. பாலசுந்தரன், I u. c. ஆகிய இருவரும் திருக்குறள்பற்றிப் பேசுவார்கள்.

கல்லூரி வீணையாசிரியர் சங்கீதபூஷணம், திரு. இரா. சண்முகசுந்தரம் பிள்ளையவர்களும், மிருதங்க ஆசிரியர் லயவித்துவமணி திரு. கு. பாலகுருநாதன் பிள்ளையவர்களும் இன்னிசைவிருந்தளிக்கிறார்கள்.

Regd No. M. 4454

தருமபுர ஆதீனம்

ஸ்ரீ மகாலக்ஷ்மீ துர்க்காதேவிக்கு

நவராத்திரி விழா

[8—10—53 முதல் 16—10—53 முடிய.]

நாடோறும் லக்ஷார்ச்சனைகள், சதசண்டி யக்ஞம், தேவிமாகாத்மிய பாராயணம், விசேஷ அபிஷேக ஆராதனைகள், கொலுஅலங்காரம், சொற்பொழிவுகள், நாடகங்கள் முதலியன் நிகழ்கின்றன.

11, 12—10—53 ஞாயிறு திங்கட்கிழமைகளில் பொம்மலாட்டம் நடைபெறும்.

ஜன்மநக்ஷத்திரத் திருநாள்

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்மநக்ஷத்திர நாட்களில் திருப்பதிகம்பெற்ற சிவஸ்தலங்களில் ஆதீனச்சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப் பதிகங்களையும் அச்சிட்டு வழங்கிவருதல்போல, இம்மாதத்திலும் 8—10—53 அன்று திருஅரிசிற்கரைப்புத்தூர் ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்து தலப்பதிக வெளியீடும் வழங்கப்பட்டது.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram, (Mayuram.) 9—10—1953.